36

...ன்" தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நெ. 9.

உ

கடவுள் துணை.

கவிச்சக்கரவர்த்தியாகிய

ஒட்டக்கூத்தர் அருளிச்செய்த

# ஈட்டி யெழுபது

## மூலமும் - உரையும்.

இவை

தமிழ்ப் பண்டிதர்

பு. அ. கோவிந்தராஜ நாயகர் அவர்களால்

பார்வையிடப்பெற்று,

சென்னைப் புரசை,

"மாறன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ரெஜிஸ்தர் செய்தது.

இதன் விலை] 1928. [அணா ௬

# ஆனந்தமனோகரி

(அல்லது)

## கொள்ளைக் கூட்டத் தலைவன்

**என்னும் அற்புத நீதிமார்க்க முறைக்கும் நூல்.**

இவை சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் மாணவர் பு. அ. வரதராஜ நாயகர் எழுதியது. இதிற் கொள்ளைக் கூட்டத்தாரின் கோரசம்பவங்களும், கொள்ளைக் கூட்டத்தாருடன் சேர்ந்திருந்த ஒருவன் ஒரு தவச்சிரேட்டரின் அனுக்கிரகத்தினால் முழுமுனிவனாகி, நீதிமார்க்கங்களை உபதேசிக்கும் வண்மைப் பெற்று விளங்கியதும், கதாநாயகன், கதாநாயகி, இவர்களை துன்புறுத்தியவன் துன்பமடைந்ததும். நன்மைசெய்தோர் நன்மையடையும் முறையும் வெகு அழகாய் எழுதி இருப்பதோடு, கதை முழுவதையும் விளக்கிக் கூறும் அகவற்பாக்கள் புத்தகத்தின் இறுதியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா—**10**.

## யாப்பருங்கலக்காரிகை மூலமும்,

குணசாகரர் இயற்றிய பழைய உரையும்;

சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர், கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் எழுதிய தெளிவு பொருள் விளக்கவுரையும், குறிப்புரையும், முன்பில்லாத சிலபாக்களின் இலக்கணமும் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா **1 4 0**

---

கிடைக்குமிடம்:—

"மாறன்" அச்சுக்கூடம் புரசை, சென்னை.

"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நெ-9.

உ

கடவுள் துணை.

கவிச்சக்கரவர்த்தியாகிய

ஒட்டக்கூத்தர் அருளிச்செய்த

# ஈட்டி யெழுபது

## மூலமும் - உரையும்.

இவை

தமிழ்ப் பண்டிதர்

பு. அ. கோவிந்தராஜ நாயகர் அவர்களால்

பார்வையிடப்பெற்று,

சென்னைப் புரசை,

பு. அ. வேங்கடேச நாயகர் அவர்களது

"மாறன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ரெஜிஸ்தர் செய்தது.

1927.

# வண்ணத் திரட்டு

இதில் பல வித்துவான்களால் இயற்றப்பட்ட வண்ணங்களும், தண்டபாணி சுவாமிகள் என்னும் (புலவர் புராணம் பாடிய) முருகதாசர் இயற்றிய வண்ணமும், சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் இயற்றிய வண்ணமும், வசனநடையில் எழுதிய வண்ணப்பாவின் இலக்கணமும் சேர்க்கப்பட்டிருப்பதோடு வண்ணப்பாவின் இலக்கணத்தை கூறும் பண்டைய சூத்திரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா—8.

திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார்

அருளிச்செய்த

# அஷ்டபிரபந்தம்

இதற்குச் சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் மாணவர் பு. அ. கோவிந்தராஜ நாயகர் இயற்றிய துறைவிளக்கமும், அரும்பத உரையும், இந்நூலாசிரியர் இயற்றிய திருநறையூர்நம்பி மேகவிடுதூதும், திருத்தல மகிமையும், திருத்தலங்களுக்கு திருநாமம் வந்த காரணமும் புதிதாக எழுதப்பட்டிருக்கின்றன. விலை ரூ—1

பல வித்துவான்கள் பாடிய

# சீட்டுக்கவித் திரட்டு.

விலை அணா—3

---

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,

புரசை, சென்னை.

கடவுள் துணை.

# சிறப்புப்பாயிரம்.

---

## புதுவை. க. சுப்பராய முதலியாரவர்கள் இயற்றியது.

உலகெலாந் தந்த வுமையொரு பாக
னிலகுநன் னுதலெழீஇ யெரிசுடர் விழிப்பொறி
யாறொரு கூறு யீறில்பே ராற்ற
லானன மிருமூன் றனெனு முறைபெறீஇ
மிளிர்சர வணபவன் கிளர்புய வீர
வாகுதே வாதி யாகுமொன் பதின்ம
ரிணையறு பூதக் கணமொடு சென்றோ
ரிடும்பையி லமரர்க் கடும்பகை யாஞ்சூர்
முதறடிந் தும்பர் பதிசசி மணாளற்
கருளுபு தேவகுஞ் சரிமணம் புணர்ந்தோ
ரெல்லையி லாட னல்லுல காடுபு
பாமக டலைவன் மாமகள் கொழுந
னாதியோர் வழுத்த சோதியார் கந்த
மலைமிசை நிலைஇய கலைநிறை புலவன்
றன்னருள் சுட்டிப் பின்னிகல் வல்லன்
மறுவழி வந்த தறுவின னுமுசு
குந்தனின் றூற்று மந்தமி றவத்திற்
கிதயம துருகி நிதியருள் பெருகி
வந்துபோர் கண்டசெங் குந்தரொன் பானெனும்
வீரரை யவன்படை வீரராத் தரவவர்
கோவின்மங் கையர்க்குக் காவல ராகி
யெட்டுத் திக்குள மட்டறு மடையலர்

போரில்வெங் கண்ட சீரிய ராயமர்ந்
தான்றபே ராற்ற லேன்றசுந் தரராங்
குமரரைத் தரவவர் மிளிர்திற லெண்ணா
ரெண்ணச் சென்னாள்கடை நண்ணிப் புரிந்திட்
டோவாச் செல்வ மேவாத் தகைபெறாஉஞ்
சந்தமார் மருமர்செங் குந்தர்வண் புகழ்நில
மெங்குமின் றொளிர்தரத் தங்குலத் தாயிரஞ்
சிரமறுத் தாசனந் தரையிலிட் டொப்பிலா
வமிழ்தினிற் சுவைதரூஉந் தமிழ்தெரி புலவரா
மரசருக் கருசனா வுரைசெய்சென் னியுமகிழ்ந்
தேத்திடு மொட்டக் கூத்தனை யிருத்தி
யவன்றிரு வாயா னவந்தரக் கேட்ட
வீட்டி யெழுபதென நாட்டு பிரபந்தங்
கற்றவர் மற்றைய ருற்றெளி தறிதர
வியற்றமி ழுரையாக் குயிற்றித் தருகென
வதுவை நீங்காத புதுவையா மமரர்
பதியினல் லொழுக்கந் துதிபெறக் கிளைத்துச்
சந்தமார் கல்விச் செந்தளிர் தளிர்த்தே
ரியலிலக் கியமெனு நயமலர் பூத்துத்
திசைபல வுஞ்செல விசைமணம் வீசிச்
சுவைதரு மின்சொன் னவநற வந்துளித்
துலகுணக் கொடைக்கனி யிலகுறப் பழுத்தே
யின்புறு நண்பர்க் கன்பெனு நிழறந்
தற்புதத் துயர்ந்த கற்பகத் தாரு
சுந்தர மமைந்தசெங் குந்தநன் மரபில்
வந்தந் தரிக்கிடந் தந்தசங் கரனருண்
முருகனம் போருகச் சரணம்வாய் நெஞ்சினன்
வள்ளலென வுரைக்கும் வெள்ளைமுத் தேந்திரன்
மார்தவத் துதித்த வாதவ னருத்த

பென்னைய நல்கெனும் பொன்னைய பூபன்
நல்லப்ப னென்னுஞ் செல்லொக்கும் வண்கை
முதல்வ னுதவிய புதல்வ னெனமரீஇத்
திக்கனைத் தும்புகழ்ச் சக்கர நடாத்தும்
ஒப்பிலாச் சவலைச் சுப்பரா யக்கோ
வும்பரும் புகழும் அம்புலித் தோன்ற
லரிதினிற் பயந்த கரையில்சீர்க் காளை
யொப்பாரு மில்லா அப்பாவு குரிசிற்
பிள்ளைவண் டார்தொடைப் பள்ளிகொண் டான்சுதன்
பங்கய முகம்பார் மங்கைய ரிரந்தோர்
முத்தைய தாவெனு முத்தைய கோமான்
மட்டறு புகழினன் குட்டய நரபதி
யருந்தவப் பயனெனப் பெருந்தல முதித்த
பூண்டவி ராதணி தாண்டவ ராயவே
ளிப்புவி யெலாம்புகழ் சுப்பரா யன்செயு
நன்னிலை வந்த சென்னிலை யுடைய
அண்ணா மலையென நண்ணு நாமத்தன்
நனைதார்த் தோளினன் வினைதீர்த் தான்றிருத்
தோன்றலென வந்த வான்றகலை வல்ல
விராமதா பரனெனு மிராமசா மிப்பதி
பொன்னுத் தருங்கச் சின்னுத் தைதந்த
சிவசங்க ரிக்காள் சிவசங்க ரக்கோ
வருணணில் விளங்கும் அருணாச லன்றருங்
குழந்தையென் றுதித்த குழந்தையென் பெயரோ
னுவலுமொன் பதின்ம ருநுவன் முகத்
திசைபல வற்றினு மிசைபிர பந்த
மாயிர மமைத்ததின் மீயுயர் பொருளின்
வழுக்களைந் தான்ற விழுப்பொரு ளாக
அங்கையி னெல்லிச் செங்கனி யென்ன

வியற்றின னுரைபெருங் கயற்றிர ளெழுந்து
மழைதலைச் சுமந்த தழைகமு கின்குலை
யுருத்தர விந்த நகைத்துணை ருறங்கு
மணிநீர் வளத்த வணிநீர்ப் பெண்ணை
நதிபுற முடுத்த நிதிபெறு பட்டாம்
பாக்கத் தெழிறரு மாக்க டுதிக்குஞ்
சிதம்பர முகிலரு ளிதம்பன்
வாய்மைசேர் சுப்ப ராயநா வலனே.

---

தருமபுரவாதீனம்
சோமசுந்தரக் கவிராயரவர்கள்
இயற்றியது.

சீரார்பொன் னையன்முனந் திரையமுதைப் புலவருணச்
செய்தல் போலிப்
பாராரப் புதுவையில்வாழ் பொன்னையுமா லீட்டியெழு
பதெனும் வாரி
நேராரு முரையமுதை யெழிற்பட்டாம் பாகைமகிழ்
நிபுணன் மிக்க
பேராருஞ் சுப்பரா யக்கவியா மந்தரத்தாற்
பெறச்செய் தானே.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

# ஈட்டியெழுபது

## மூலமும் - உரையும்.

கடவுள் வாழ்த்து.

நாட்டிலுயர் செங்குந்த நாயகர்மீ திற்சிறந்த
வீட்டி யெழுபதினைப் பாடக்—கோட்டிற்
பருமா வரையதனிற் பாரத நூறீட்டுங்
கரிமா முகன்கழலே காப்பு.

எ-து. இச்செய்யுள் மேலெடுத்துக்கொள்ளுங் காப்பிய மிடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுக் கடவுள்வாழ்த் துக் கூறப்படுகின்றது.

இ-ள். உலகத்தி லுள்ளவர்களாற் றுதிக்கப்படுகின்ற மேலான புகழையுடைய செங்குந்தத்தலைவர்கண்மீது பல சிறப்புகளு மமைந்த ஈட்டியெழுப தென்னும் பிரபந்தத்தை யான் பாடத் தனதொரு கொம்பினாற் பருத்துயர்ந்த மேருமலை யிற் பாரதநூலை யெழுதிவைத்த அழகிய யானைமுக விநாய கக்கடவுளினது திருவடிகளே துணையாகும் எ-று.

* நாடென்ப துலகின் மேற்று.

நாட்டிலுயர் செங்குந்தரெனவே, உலகத்தி லுள்ளவர் களாற் றுதிக்கப்படுகின்ற மேலான புகழையுடையவென வரு விக்கப்பட்டது.

ஒருவராலு மெழுதற்கரிய மகா பாரதத்தைத் தனதொரு கொம்பினா லெழுதி நிறைத்த கடவுளென விசேடித்தமையால் இக்காப்பியமுங் குறைவின்றி நிறையுமென்பது கருத்து.

---

* உலகமென்ப துயர்ந்தோர்மாட்டே. பிங்கலநிகண்டு.
நாடென்பது நாட்டிலுள்ளவர்களைக் குறித்தது.

## பாயிரம்.

பூவார் * புவனையிற் சோமன் றரும்பழி போனபின்பு
நாவாணர் போற்றிய நாடகங் கேட்ப நலமுடனே
யாவாணர் செங்குந்த ராயிரத் தெண்டலை கொய்திரத்தப்
பாவாடை யிட்ட துலகமெல் லாம்புகழ் பாலித்ததே.

இ-ள். ஆலூரில் நலமிக்க செல்வத்துடனே வாழ்கின்ற செங்குந்தத்தலைவர்கள் அழகமைந்த புவனையென்னும் பட்டினத்தில் சோமாசியாண்டாரால் நேர்ந்த பழிநீங்கிய பின்னர், புலவர்களாற் போற்றப்படுகின்ற ஈட்டியெழுபதென்னும் பிரபந்தத்தைக் கூத்தனென்னு மென்னுற் கேட்பதற்காகத் தங்களி லாயிரத்தெண்மர்களது சிரங்களைக்கொய்து இரத்தப் பாவாடை யிட்டமை உலகமுழுதினும் புகழ் தந்தது எ-று. இது தொகை.

இனியிதன் விரி வருமாறு.

ஆலூரின்க ணரசச் செல்வத்தோடு வாழுகின்றவராகிய செங்குந்தத்தலைவர்கள் சிவத்தல யாத்திரை வாயிலா யங்ஙனம் வந்த கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தரென்பவரால் தங்கள் மரபினைப்பற்றி யோர் பிரபந்தத்தினைக் கேட்பான் விரும்ப, அதற்கவர் தாமுஞ் செங்குந்த மரபினராதலால் தமது மரபைத் தாமேபுகழ்தலிற் பெருமையில்லை யெனவும் சுபபுராணங்கள் பதினெட்டினுளொருமுப புராணங்கள் பதினெட்டிலு முள்ள காந்தபுராண மொன்றுமே நமது மரபின் கீர்த்தியை மிக விளக்குவதாற் போதுமான தெனவுங்கூறி மகாலட்சுமி வீற்றிருக்கின்ற செந்தாமரை மலர்கணிறைந்த தடாகங்களாற் சூழப்பட்ட புவனையென்னும் பட்டினத்தில் தமக்கு மிக நண்பரும் பூர்வ மொருசாலை மாணுக்கருமாயுள்ள

* புவனை:—சிதம்பரம் தாலுக்காவிலுள்ள புவனகிரி யென்று சிலரும், கும்பகோணம் தாலுக்காவிலுள்ள திரிபுவனம் என்று சிலரும் கூறுகின்றனர்.

சோமாசிபாண்டா ரென்னு மோரந்தணர் வீட்டுட் சென்று
தமது நித்தியவிய்திகளை முடித்துக்கொண்டிருக்க, அப்போ
தச் செங்குந்தத் தலைவர்கள் தாங்கள் கேட்க விரும்பியதை
மறுத்துச் சென்ற வவரைக் குலாபிமான மில்லாதவ ரெனக்
கருதிக் கொலை செய்யத் துணிந்தவர்களா யவ்வந்தணரிடஞ்
சென்று புலவர்பெருமானைத் தரும்படி கேட்க. அதற்கவர்
தமது நண்பரைக் காக்குநிமித்த மவருக்கதை யுணர்த்தாமலே
தமதொரு பிள்ளையை யொருபெட்டியில் வைத்து மூடி அவர்க
ளெதிர்க் கொணர்ந்து நீங்கள் கேட்ட புலவ ரிதனுள் ளிருப்
பக்கண்டு உமக்கவர்பா லாகவேண்டுவதை இவ்வெல்லை கடந்து
போ யினிதின் முடித்துக்கொண்மின்களென்று கூறிக் கொடு
க்க, அவர்க ளதைக்காட்டிற் கொண்டுபோய்த் திறந்து பார்த்
துத் தாங்கள் கருதிய புலவரல்லாமையின் பிரமகத்திக்கஞ்சி
மீண்டு அப்பழியை விட்டு நீங்கினபின்பு அவ்வந்தணர் முன்
னிலையி லப்புலவர் பெருமானது சம்மதிகொண்டு தங்குலத்
தாயிரத் தெண்மர்களது தலைகளைவெட்டி இரத்தப்பாவாடை
யிட, அதன்மீ தப்புலவ ரேறிவந்து நாவாணராற் போற்றப்படு
மிவ்வீட்டி யெழுபதென்னும் பிரபந்தத்தைச் சொல்லக்கேட்டு
மகிழ்ந்த புகழ் உலக மெல்லாம் பெருகியது: என விரியுரை
வருதலுணர்க.

பூவார்புவனையெனவே, தடாகங்களிற் றாமரை மலர்வ
துந் தாமரைமலரி லிலக்குமி யிருப்பது மியல்பாதலின் இலக்
குமியுந் தடாகங்களும் வருவிக்கப்பட்டன.

கூத்தரென்னும் புலவரேறு செங்குந்த மரபினரென்ப
தும் தமது மரபை யபிமானத்தாலேனு மற்றைய 'வவாவினு
லேனும் தாமே புகழ்தலிற் பெருமையில்லை யென மறுத்தல்
முறைமை யென்பதும், அதற்காவூர்ச் செங்குந்தத் தலைவர்க
ளவரைக் குலாபிமான மில்லாதவ ரெனக்கருதிக் கொலைசெய்ய
துணிந்தனர்தன ரென்பதும், அஃதுணர்ந்த சோமாசியாண்

டார் தமதில்லடைந் தான்மார்த்த வாராதனத்துள்ள புலவர் பெருமானது பழைமையான நண்பினைப் பாராட்டித் தனதொரு பிள்ளையை யவர்க்குப்பதிலாக வறிவிக்காமலே கொடுத்தா ரென்பதும், அப்பிள்ளையைப் பழிக்கஞ்சி யவர்கள் விடுத்தா ரென்பதுந் தோன்ற சோமன்றரும் பழி போனபின்பு என்றார்.

செங்குந்தர் மரபினது பெருமையு மம்மரபைப்புகழ்ந்த கூத்தரது கல்வித்திறனுந்தோன்ற நாவாணர் போற்றிய நாடகம் என்றார்.

ஆவூரி லரசச் செல்வத்தோடு வாழ்ந்தன ரென்பது தோன்ற நலமுடனே யாவாணர் என்றார். வாழுநர் வாண ரெனத் திரிந்து நின்றது

செங்குந்தரது செயவீரத் தன்மையு நூலினது தெய்வீகத் தன்மையு பந்நூல் செய்த புலவர் பெருமான துயர் வொப்பில்லாப் பெருமையையுந் தோன்ற ஆயிரத்தெண்டலே கோத்திரத்தப் பாவாடை யிட்டது என்றார்.

அத்தலைகளியாவும் பின்ன ருயிர்பெற் றெழுந்தன வென்பது தோன்ற உலகமெல்லாம் புகழ் பாலித்தது என்றார்.

# நூல்.

மங்கல முதலிய சப்தபொருத்தங்களுமமைய
வாழ்த்துக் கூறியது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பூதலம் வாழ்க குந்தர் பொலிவுடன் விளங்க நான்கு
வேதமெந் நாளு மோங்க வேதியர் பசுக்கள் பல்க
மாதவர் வளவன் செங்கோல் வளமைகுன் றாது மிக்க
வோதமே யறையும் பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மாதோ.

இ-ள். மழைவளமுஞ் செந்நென்முதலிய பயிர்வளமும் பொன்மணி முதலிய நிலவளமும் பெருகி உலகம் மேன்மேலும் வாழ்ந்திருக்க, செங்குந்தத்தி லவர்கள் நீடூழி காலம் பொலிவுபெற்று விளங்கியிருக்க, இருக்குமுதலிய நான்கு வேதங்களும் எக்காலமும் விருத்தியடைந்திருக்க, ஓதன்முதலிய வறுதொழிலுக்குரிய வந்தணர்கள் ஆகவனீயம் காருகபத்தியம் தட்சணாக்கினீயம் என்னு மூன்றக்கினியையும் நாடோறும் வளர்த்து நியமந்தவறாது பெருகியிருக்க, பசுக்கள் தேவாராதனை முதலியவற்றிற்குக் கோசல கோமய முதலிய பஞ்ச கௌவியங்களுமுதவி மிகுதியா யிருக்க, பெரியோர்கள் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் வளமைபெற்ற தவங்களைச்செய்து வருமையின்றி யிருக்க, குலோத்துங்கச் சோழனுடைய செங்கோலினது வளமையாகிய படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்னுமிவைகள் குறைவின்றி யிருக்க, நீர்ப்பெருக்கிற் கடலையே யுவமையாகக்கூறுங் காவேரியாறும் அதனாற் சூழப்பட்ட உறையூரென்னு மிராசதானியுஞ் சிறப்புற்றிருக்க எ-று. 1

உறந்தையு மென்றதி லெச்சவும்மை பொன்னியேயன்றி யுறந்தையுமெனப் பொருடரலால், இறந்தது தழீஇயது.

அல்லதூஉம்-சோழராசர்களுக்கு மகுடாபிடேகஞ் செய்விக்கும் பஞ்ச சிங்காதனத் தலங்களில் பொன்னியாற் சூழப்

பட்ட கருவூர் தஞ்சை முதலிய விராசதானிகளுமே யன்றி உறையூருமெனினு மமையும்.

இவ்வீட்டி யெழுபதென்னும் பிரபந்தத்தைக்
கல்வித்திறமுடைய சோழனு மகிழ்ந்து
கேட்டானென்பதை விளக்கியது.

கோட்கவி கொண்டு மாக்கள் கொடுந்தமிழ் கூற நீத்துத்
தாட்கவிப் புதிய வாட்டந் தலைக்கடை தூங்கச் சாட
வாட்கவி கொண்ட மன்னன் வளவனு மகிழ நாமே
நாட்கவி பாடு நாட்போ லிருப்பது பெரிய நாடே;

இ-ள். புல்லிய கவிவாணர் முன்னோர்து மேற்சோளாகிய பழமொழிப் பொருளைக் கொண்டு சிலசில பிரபந்தங்களைப் பாடிவந்து அரங்கேற்றுங் கொடுந்தமிழை நீக்கி, நாடோறு முண்டாகு மிப்புதிய வாட்டங்கள் செட அப்போசிக் கவிகளைத் தலைவாயிலளவுந் தூக்கிச் சாடும்படி வாள்போன்ற வெண்ணைக் கவிச்சக்கரவர்த்தியாகக் கொண்டிருக்கும் இராசாதிராசனாகிய குலோத்துங்கச் சோழனு மகிழ்ந்து கேட்கக் கூத்தனாகிய நாமே நாடோறும் புதிதாக விளங்குமிக் கவிகளைப் பாடுகின்ற விங்காளைப்போலவே, பெரிய சோழநாடானது சிறப்புற்றிருப்பது எ-று. 2

சேங்குந்தத்தலைவர்க ளிச்சிவத்தலங்களுக் கெல்லாந்
தருமகர்த்தர்க ளென்பது.

* விடங்கமே முதி வீதி விடங்கமா ரூர்வெண் காடு
நடங்கொளுந் தில்லை மூதூர் பஞ்சநன் னதிசாய்க் காடு

* சப்தவிடங்கத் திருத்தலங்கள்:—1 திருவாரூர்-வீதிவிடங்கம், 2- திருநள்ளாறு நகரவிடங்கம், 3-திருநாகைக்காரோகணம் (நாகப்பட்டினம்) சுந்திரவிடங்கம், 4- திருக்காராயில் (காறைவாசல்) ஆதிவிடங்கம், 5-திருக்கோளிலி (திருக்குவளை) அவனிவிடங்கம், 6-திருத்தென் திருவாய்மூர் நீலவிடங்கம், 7-திருமறைக்காடு (வேதாரண்யம்) உத்ரவிடங்கம் என்பனவைகளாம்.

பீடங்கொள்மா காள் மேழு மிடைமரு தூர்செங் காடுந்
தொடங்கிய தரும வாட்சிச் செங்குந்தர் தொகுதி வாழி.

இ-ள். தியாகராயர் வீற்றிருக்கின்ற வீதிவிடங்க மென்னுந் திருவாரூர் முதலிய சப்த விடங்கங்களும், திருவெண்காடும், சபாபதி நடனஞ்செய்யாநின்ற புராதனமான சிதம்பரமும், திருவையாறும், திருச்சாய்க்காடும், இடமகன்ற மாகாளமென்னும் பெயர் பெற்ற சப்த சிவத்தலங்களும், திருவிடைமருதூரும், திருச்செங்காடுமாகிய இத்தலங்களுக்கு ஆதிமுதல் தரும கர்த்தத்துவமாக யிருந்து பரிபாலனஞ்செய்கின்ற செங்குந்தர் கூட்டங்கள் வாழ்ந்திருக்க எ-று. 3

காந்தபுராணத்தி லுள்ளபடி சுப்பிரமணியக் கடவுள்
வீரவாகுதேவர் முதலிய நவவீரர்கள்
இலட்சங் கணங்கள் இவர்களுற்பத்தி கூறியது.

பாதநூ புரத்திற் றேவி சாயைகண் டமலன் கொண்ட
காதலாற் கருப்ப மாகுங் கதிர்நவ மணிமா தர்க்கண்
மேதகு வீரத் தோடு மென்மீசை யோடும் வந்த
மாதவ வீர வர்குத் தலைவரித் தலைவர் மாதோ.

இ-ள். உமையின் பாதச்சிலம்பி லுதிர்ந்த நவமணிகளில் அப்பார்வதியார் திருவுருவத்தைக் கண்ணுற்றுச் சிவபிரான் கொண்டருளிய விச்சையாற் கருவுற்ற ஒளியுடைய நவரத்தினப் பெயர்கொண்ட மகளிர்களிடத்தில், மேம்பாடமைந்த வீரத்தன்மையுடனு மிருதுவாகிய மீசையுடனு முதித்த மகா தவத்தையுடைய வீரவாகுதேவர் முதலிய நவ வீரர்களின் மரபினர் இச் செங்குந்தத் தலைவர்கள். எ-று. 4

மாது-ஓ-அசைகள்.

பூர்வம் விட்டுணு முதலிய தேவர்கள் சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் முதலிய அவுணராற் றுன்புற்று வெள்ளி யங்கிரியி லெழுந்தருளிய பரமசிவனை வணங்கித் தங்கள்

குறையைச் சொல்லி யிரக்க, அப்பரமசிவன் அவர்பாலிரக்கமுற்றுத் தமது தொல்லையதாகிய வாறு முகத்தோடு பார்வதி சமேதராய் விளங்கி அம்முக மாறனுள்ள நுதற்கண்களினின்றும் ஆறக்கினிப் பொறிகளை வெளிப்படுத்த, அப்பொறிகள் அண்ட ரண்டங்க ளெல்லா நடுங்கும்படி தகிக்க, உமையும் பயந்தெழுந்து தனது சிலம்புக ளொன்றோ டொன்று தாக்குற் றொலிக்கும்படி அந்தப்புரத்திலோட, விண்டு முதலிய தேவர்கள் திக்குகடோறு மோடி வருந்திப் பெருமூச்சுவிட் டொருவிதத்தினுஞ் சகித்துயிர் பிழைத்த லரிதாகிப் பின்னும் பரமசிவனை நெருங்கிச் சுவாமீ! மிக்க வலியையுடைய அவுணர்களை யழிக்கத்தக்க வொரு பிள்ளையைக் கிருபை செய்ய வேண்டினோம், அதற்கு முடிவிலாத வாற்றலையுடைய அக்கினியைக் கிருபைசெய்தீர், அவ்வக்கினியானது உலகெங்கும் பரந்து துன்பப்படுத்துவதா லந்நெருப்பை யோர்கணத்துள் மாற்றாவிடில் உலக முடிவாமென்று துதிக்க, அக்கடவுளிரங்கி யஞ்சலீரென்று கையமைத்து அத்தருணத்திற் புதிதாகத் தோன்றிய ஐந்து முகங்களையு மாற்றி ஏக முகத்தோடு விளங்கி அத் தீப்பொறிகள் குறுகித் தம் மெதிரில்வரச் சிந்தித்து வாயுவையும் அக்கினியையு நோக்கி நீவீரிவ்வாறு பொறிகளையுங் கொண்டுபோய்க் கங்கையில் விடுவீராயின் அது சரவணத்தில் விடுமெனக்கூறி அதைத்தாங்கிச் செல்லத் தக்க வலியையுங் கிருபைசெய்ய, அவர்க ளவ்வாறே மற்றைத் தேவர்கள் தம்மைச் சூழ்ந்துவரச் சென்று கங்கையில் விட, அப் பொறிகளாறும் ஆறு குழந்தைகளாகித் தாமரை மலரில் விளையாட்டயர்தலை இந்திரன் கண்டு மகிழ்ந்து கார்த்திகை முதலிய ஆறு பத்தினிகளையு மழைத்து அக் குழவிகளுக்குப் பால் கொடுத்துக் காக்கும்படி கட்டளை கொடுக்க, அவர்கள் அவ்வாறு செய்தமையால் அக்குழவிகள் வளர்ந்து அற்புதமான திருவிளையாடல்களைச் செய்து சோலைகளே அலங்காரமான பந்தராக வமர்ந்திருந்தன.

அக்காலையி லத்தீப்பொறிகட்கு வெருவிக் காற்சிலம்புக ளொன்றோடொன்று தாக்கி நவமணிகள் சிதறும்படி ஓடின உமையவள் நடந்த விருத்தாந்தங்களை யறிந்து சிவனதருளாற் றன் வயிற்றில் உண்டாகத்தக்க மதலையை யிவ்வாறு செய்த தேவர்கள் பத்தினிமார்களுக்குக் கருப்பமில்லாமற் போகக் கடவதென்று சபித்துப் பரமசிவனது திருமுன்னர் வந்து வணங்கி உம்பர் குறைநீக்கத் தாமருளிய தீப்பொறிகளுக் கஞ்சி நீங்கி மீண்டனனென். அக்கடவுள் மகிழ்ந்து தேவியை தமதிடப்பாகத் திருத்தினர்.

முன்னமோடுகையிற் பாதச் சிலம்பினின்றுஞ் சிதறிய நவமணிகளிடத்து உமையினது திருவுருவந் தோன்ற, அது கண்ட பரமசிவன் வரக்கடவீரெனக் கிருபையோடுங் கூற, உடனே மணிக்கொரு சத்திகளாகி வந்து பரமசிவனை வண ங்க, அவர் நோக்கத்தால் முனிவர் மகளிரைப்போல வுடனே கருப்பங்கொள்ள, அதை யுமையறிந்து கோபித்து எனக்கு மாறாக நீவிர் கருப்பங் கொண்டமையால் அநேக கால மிக் கருப்பம் வெளிப்படாமல் இருக்கக்கடவதென்று சபிக்க, அதனாலவர்க ணடுக்குற்று மெய் வியர்க்க, அவ்வியர்வில் கட வுளதருளாற் சூரியத்திரள்போல் மிகுந்த வலியை யுடைய வர்களாக இலட்சம் வீரர்களுண்டாகிச் சிவத்தை வணங்க, அவர் நீவிர் வலியோடும் இந்திராதியர் பகைவரைக் கொல்வ தற்கு எமது கந்தவேள் படையாவீரென்று கிருபைசெய்ய. பின்னரம் மாணிக்கவல்லி முதலிய நவ சத்திகளுஞ் சாபத் தால் வருந்தி யநேககாலம் உமையவளுக்குப் பணிசெய்து வர, அவர்கள் கருப்பத்துள் நந்திதேவர் முதலிய சிவ கணங் கள் பாலராக வளர்ந்து ஒப்பில்லாத காளையராகி நன்னெறி பொருந்திச் சுகரென்னும்படி பரமசிவத்தைத் துதித்து வண ங்கி யோகுசெய்து வீற்றிருத்தலினாற் பொறைமேற்பட்டுத் தாங்கக்கூடாதவர்களாகி அந்நவ சத்திகளும் பரமசிவத்தோ

டுமையை வணங்கி நெடுநாளாக வித்தநுவிஞல் தொந்தனம், இனித் தாங்ககில்லோமென, சுவாமி யுமையை நோக்கி யுன் பாதச்சிலம்பி லுதித்த நவசத்திகளும் உன் சாபத்தா லநேக கால மிச்சூலொடு வருந்தினர் இனி பாலரைப்பெறக் கிருபை செய்வாயென, அதைக்கேட்ட வுமைபானவள் மகிழ்ந்து பெண்களைப் பார்த்து நீவிர் மிதந்த வலியினரான குமாரரைப் பெறக்கடவீரென்றருள. உடனே மாணிக்கவல்லி - வீரவாகு தேவரையும், தாளவல்லி - வீரகேசரிதேவரையும், புருடாக வல்லி - வீரமாமயேந்திரதேவரையும், கோமேதகவல்லி - வீர மாயேசுரதேவரையும், வயிடூரியவல்லி - வீரபுரந்தரதேவரை யும், வயிரவல்லி - வீரராக்கததேவரையும், மாகதவல்லி-வீர மார்த்தாண்டதேவரையும், பவளவல்லி - வீரராந்தகதேவரை யும், நீலவல்லி - வீரதீரதேவரையும் மேலான வீரத்தோடும் முகத்தின்கண் மெல்லிய மீசையோடும் ஈன்றருளினர் ஆகிய இவர்களே நவவீரராவார்கள்.

பின்பு பரமசிவ னுமையை நோக்கித் தேவர்களின் பொரு ட்டு இரக்கமுற்று யாம்தந்த ஆறு பொறிகளுஞ் சரவணத்து மதலையாக வளர்கின்றன, யாம்போய் கொடுவருவோ மென்று உமையோடு விடையின்மீதேறி முப்பத்து மூக்கோடி தேவர் களுந் தம்மைச் சூழ்ந்து பணிசெய்துவரச் சரவணப்பொய்கை யிடத்துப்போய் இந்த சின்மகவை யெடுத்து வருவாயென, அம்மைசென்று தன் கையா லணைத்தெடுப்ப, அக்கால் ஆறு முகமும், பன்னிருகையும், ஒருடலுமாக விளங்கக் கண்டெடு த்துவந்து சிவனது திருவடியில் வணங்குவிக்க, அவரெடுத்து மகிழ்ந்து உமையோடு தம திடதுபக்கத் திருத்திச் சகலரும் புகழ்ந்து துதிக்கக் கைலாயம் வந்தனர்.

### செங்குந்தத்தினது வல்லமைகூறியது.

பிறக்கவொன்பதின்மர்குந்தப் பெருமையாம்பேசமாட்டோம்
பறந்தன கழுகும் பாறும் பயிரவி காளி யஞ்ச

மறந்தரு மவுண ராட்ட மடங்கின மகிழ்ச்சி யால்வாய்
திறந்தன வலகை யீட்டஞ் செப்பவாய்ச் சிறுவ ரோடே.

(இ - ள்.) அவ்வா றுதித்த வீரவாகுதேவர் முதலிய நவ வீரர்களுடைய திருக்கரத்தி லிருந்த உமையவளாற் கொடுத்த படையாகிப ஈட்டியினது பெருமையை யெம்மாற் சொல்லி முடியாது, ஆயினு மொருவாறு சொல்லுகின்றோம். அவர்கள் செய்த யுத்தத்தைக்கண்டு கழுகின் கூட்டங்களும், பருந்தின் கூட்டங்களும் ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறந்தன. துர்கை யுங், காளியுங் கண்டஞ்சும்படி அதர்மம் மிகுந்த சூரபதுமன் முதலிய அவுணர்களது யாவரையுஞ் செயங்கொள்ளுங் கூத் தாட்டங் கெட்டன. அவ்வசுரர்களது கொழுத்த பிணக் குப் பையைக் கண்டு மகிழ்ந்து பேய்க்கணங்கள் தங்கள் தங்கள் சிவந்த வாயினையுடைய குழவிகளோடும் வாயைத்திறந்தன.

செங்குந்தர் முருகக்கடவுளுக்கு ஆட்டுக்கடாவை
வாகனமாக உதவினமை கூறியது.

ஓதிய வேள்வியி னுவப்ப நாரதன்
போதவே தகர்தனைப் பொங்கு தீத்தர
வேதனைப் படுப்பதை விரைந்து கட்டியே
சேதனக் குதவின திருச்செங் குந்தமே.

(இ - ள்.) நாரதமகாமுனிவன் தான் விரும்பிய பயனைப் பெற்றுச் சந்தோஷிக்க வேதத்திற் சொல்லிய விதிவழாது செய்த யாகத்தில் பொங்கி யெரியாநின்ற அக்கினியானது மிகுந்த வலியினையுடைய ஆட்டுக்கடாவைத்தர. அது தம்மை யும் அன்றிச் சகல லோகங்களையுந் துன்பப் படுத்துவதைக் கண்டு நாரதமுனிவனும், தேவர்களும் வெள்ளியங்கிரியில் விளையாடாநின்ற முருகக்கடவுளை யடைந்து முறையிட, அவ ரது கட்டளையினால் அழகிய செங்குந்தராகிய வீரவாகுதேவர் அதிசீக்கிரத்திற் சென்று அவ்வாட்டைக்கட்டி அம்முருகக் கடவுளுக்கு வாகனமாக வுதவினர். எ-று. 6

சேங்குந்தர் பிரமனுக்கு விலங்கிட்டமை கூறியது.

பொதியமால்வரைக் குறுதினி தேறவும் பொருள்சொன்ன
மதியையாறென வுடையவோர் மூவிரு வதனத்தான்
கதியை யாற்றியுங் குணத்தொடு பழகியுங்காணு
விதியைமேலவர் நடுங்கிடத் தளையிடு மிளிர்குந்தம்.

(இ - ள்.) பெரிய பொதியமலையை யிடமாக வுடைய அகத்தியமுனிவன் மெய்ஞ்ஞானத்தைத் தெரிந்துக் கொள் ளும்படி உண்மைப் பொருளை உபதேசித்த ஆறு முழுமதி யென்று சொல்லும்படி ஒப்பற்ற ஆறுமுகத்தை யுடையவ ராகிய முருகக்கடவுள், விளங்காநின்ற குந்தத்தையுடைய வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களால் சத்திய பதவிக்குத் தலைவனாக யிருந்து சிருட்டித் தொழிலைச்செய்தும் இராசச குணத்தோடு பழகியும் பிரணவத்திற்குப் பொருளறியாதிருந்த பிரமனைப் பகைவர் நடுக்கங்கொள்ள விலங்கிடுவர். எ-று. 7

சேங்குந்தர் தாருகசம்மாரஞ் சேய்தமை கூறியது.

வனமுறு வாசமா வைகல் விட்டியா
சனமுற விண்ணிடங் தனிவை குந்தமு
மினனுறு பங்கய மூவர்க் கெய்தவே
சினமுறு தாருகற் செறிசெங் குந்தமே,

(இ - ள்.) அகத்தியனாதிய முனிவர்கள் அவுணர்களாற் றுன்பமடைந்து காட்டிற் குடியாக விருத்தலை விட்டுத் தங்கள் தங்கள் பூசா கைங்கரியங்களை நடத்தவும், சுவர்க்கலோகமும், ஒப்பற்ற வைகுந்தமும், சூரியனைக் கண்டலராநின்ற தாமரை யாசனமும், தேவேந்திரன், திருமால், பிரமன் இம்மூவருக் கும் கிடைத்திருக்கவும், கோபத்தைப் பொருந்திய தாருகனை யுத்தத்தில் நாசம்பண்ணினவர் செங்குந்தத் தலைவர்களாவார்.

பானுகோபனையும் சேங்குந்தஞ் சேயித்ததேனக் கூறியது.

பூட்டிய தேரொடும் பொலிந்த பானுவை
யீட்டிய தொட்டிலி னிறுக்கு மைந்தனை

மூட்டிய சமரிடை முடித்து மாசறத்
தீட்டிய வீரர்கைச் சிறந்த குந்தமே.

(இ - ள்.) குழந்தைப் பருவத்தில் தன்மீது சூரியகிரணந் தாக்கியழலக் கோபித்து ஏழு குதிரைகளைப் பூட்டிய தேரினோடும் பொலிவு பெற்ற சூரியனைத் தெரிந்தெடுத்துச்சேர்த்த நவமணிகளாற் செய்த தொட்டிலோடுஞ் சேர்த்து இறுக்கிக் கட்டிய பானுகோபனென்னுஞ் சூரபதுமன் பிள்ளையை மீளுவித்த யுத்தகளத்தினிடத்துச் சங்கரித்து, அவுணர்களாகிய குற்ற நீங்கும்படி புகழை யுலகத்தி லெழுதிவைத்தது நவவீரர்களது கையிற்பிடித்த சிறப்புப்பெற்ற குந்தம். எ-று. 9

தீட்டியது தீட்டியவெனக் குறைந்து நின்றது.

சிங்கமுகாசூரன் வதை கூறியது.

பங்கமி லரிமுகப் பன்றலைக் கிளை
மங்கவே நூறியோர் வாகை மாலையை
யெங்கள் வேற்படை தனக்கென்று சூட்டியொண்
செங்கடம் பணியுமால் செய்ய குந்தமே.

(இ - ள்.) இரத்தத்தாற் சிவந்த குந்தமானது கெடாத வரத்தைப் பெற்ற சிங்கமுகாசுரனுடைய பல தலைகளாகிய கிளைகள் கெடும்படி சங்கரித்து ஒப்பற்ற வெற்றி மாலையை எங்கள் முருகக்கடவுள் வேலாயுதத்திற்கே தக்கதென்று தரித்து விளக்கமாகிய செங்கடப்ப மாலையைத் தான் தரித்துக் கொள்ளும். எ-று. 10

சூரபதுமாசுரன் வதை கூறியது.

வனப்புறு மிளவலும் வரச்செவ் வேற்குகன்
கன்பக லாறினிற் கலாப மேறியே
யினப்புகழ் சேவலங் கொடிதற் கேற்றுவெஞ்
சினப்புலிக் கொடிதரச் செறிசெங் குந்தமே.

(இ - ள்.) அழகுபொருந்திய இளவலாகிய வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களுந் தம்மைச் சூழ்ந்துவர இரத்தச் சாற் சிவந்த வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளானவர் பெருமை பொருந்திய ஆறுநாளையில் சூரபதுமனைச் சங்கரிக்க அவன் கடலில் தலைகீழாக மாமர வுருவங்கொள்ள, அதை வேலினு லிருபிளவாக்க, அவ்விருபிளவும் மயிலுங் கோழியு மாகிவர, அம்மயிலை வாகனமாகவேறி, தன்னினத்தைப்புகழா நின்ற கோழியைக் கொடியாகத் தமது கையிற்றாங்கிக் கொடிய கோபத்தையுடைய சூரபதுமனது புலிக்கொடியைக் கொடுக்க அச் செங்குந்தர்கள் பெற்றனர். எ-று. 11

செங்குந்தர் தேவர்சிறை மீட்டமை கூறியது.

குறையினைக் கடவுளர் கூறக் கேட்டவர்
துறையினை நிறுவியே சூர்த டிந்துநான்
மறையினை வழுவற வளர்த்துத் தேவர்தஞ்
சிறையினை மீட்டது திருச்செங் குந்தமே.

(இ - ள்.) தேவர்கள் சூரபதுமனுல் தங்கள் தங்கள் கர் மானுட்டான முறைமை செலுத்தல் முதலிய செயல்களை யும் விட்டுத் துன்பப்படுங் குறைகளைச் சொல்லக்கேட்டு அச் சூரபதுமன் முதலிய அவுணர்களைக் கொன்று, அத்தேவர்களை மகேந்திர புரத்தினின்றுஞ் சிறைமீட்டு அவரவர்கள் செய்யுந் தொழிலை நிலைபெறவைத்து, இருக் கு முதலிய நான்கு வேதங் களையுங் குற்றமற வளர்வித்த புகழையுடையது அழகிய செங்குந்தம். எ-று. 12

தேவேந்திரனுக்குப் பொன்னுலகச் சீர்நிலைபெறச் செய்தது செங்குந்த மென்பதை விளக்கியது.

தாருவுஞ் சுரபியுந் தவள வேழமுந்
தாருடைப் புரவியுஞ் சசியுங் கைம்மிசைப்

போருடை வச்சிர வாளும் பொன்னகர்ச்
சீருறும் படியவும் செறிசெங் குந்தமே.

(இ - ள்.) அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரி சாதம், மந்தாரம் ஆகிய பஞ்சதாருக்களும், காமதேநுவும், வெள்ளிய ஐராவதமும், சதங்கை மாலை முதலிய பல மாலைகளையுடைய உச்சைச்சிரவமென்னுங் குதிரையும், இந்திராணியும், கையின்கட் டாங்கிய பகைவரது போரை யுடைக்கா நின்ற வச்சிராயுதமும், பொன்னுலகத்தி லரசிருத்தன் முதலிய பல சிறப்புகளுமாகிய இவற்றைத் தேவேந்திரனடைந்து வீற்றிருக்கும்படி சூரபதுமன் முதலிய அவுணர்களை யழித்தது செங்குந்தம். எ-று. 13

சீரும் உறும்படி. என்னு மெண்ணும்மை விகாரத்தாற் றொக்கது.

செங்குந்தராகிய நவவீரர்கள் தேவர்பகை யாவையும்
ஒழித்தனரேன்பதை விளக்கியது.

முன்பகை யாவையு முடித்துக் கூரெயிற்
றன்பகை யாவையுந் தடிந்து சந்ததம்
பின்பகை யில்லதாப் பெற்றி செய்ததா
மொன்பதி னோர்கரத் தொளிருங் குந்தமே.

(இ - ள்.) பழைய பகையாகிய சூரபதுமனைக் கொன்று அவனுக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றிக் வெற்றிக் கூரிய பற்களையுடைய சிங்கமுகாசூரன் முதலிய தேவர் பகையில்லாததாக வீரத்தன்மையைச் செய்தது வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களது கையின்கண் விளங்காநின்ற குந்தம்.

சூரபதுமன் முற்செனனத்தில் முருகக்கடவுளுக்குப் பகை யென்பதும், அவன் தமக்கு வாகனமாகவும் கொடியாக வுமிருக்க முன் வாமுளா தென்பதுந் தோன்ற "முன்பகை யெனவும் யாவையு முடித்தெனவும்" கூறினர்.

முடித்தென்பதற்குக் கொன்றெனவும் நிறைவேற்றி யெனவும் பொருள்கொள்க.

### செங்குந்தர் கையிலைமுதலிய விடங்களைக் காக்கப்பெற்றமை கூறியது.

வெள்ளிமால் வரைசூழ்காப்பு மிளிர்மணிச் சிரக்காப்பும்
பள்ளிமால் வரையின்காப்பும் பைம்பொனாபரணக் காப்பும்
வள்ளிதாக் கைக்கொளென்று மகிழ்நீற்றுக் காப்புமிட்டுத்
தெள்ளிதா யுமையாடந்த செங்குந்தம் போலுமுண்டோ.

(இ-ள்.) உயர்ந்த வெள்ளியங்கிரியைச் சூழ்ந்து காக்கின்ற காவலும், உச்சியின்கண் பிரகாசம் பொருந்திய இரத்தினங்களிழைத்த கொலுமண்டபக் காவலும், அந்தப்புரத்தையுடைய மகமேருவின் காவலும், பசும்பொன்னாலு மணிகளாலுஞ்செய்த ஆபரணக் காவலும், வளப்பமாகக் கைக்கொள்ளுங்களென்று உமையவள் நவவீரர்களை யழைத்து மகிழ்ச்சியோடு திருநீற்றுக் காப்புமிட்டுத் தெளிவாகக் கொடுக்கப்பெற்ற இச் செங்குந்தம் போலப் புகழ்பெற்றது இவ்வுலகத்தில் வேறுண்டோ. எ-று. 15

### செங்குந்தர்கள் சிவனது மரபினரேன்றும் உமையவளாற் கைவேலைப் பெற்றனரேன்றுங் கூறியது,

சலம்பிரி யாத சூட்டுச் சாவற்கே தனமெஞ் ஞான்றும்
வலம்பிரி யாத செவ்வேட் குறுதுணை யாக மன்னுட்
குலம்பெற வந்தா ரென்றங் கொடியுமை தந்த வீட்டி
நலம்பெறு மிந்தக் குந்தர்ப் பரிசுபோ னாட்டி லுண்டோ.

(இ-ள்.) தன்னினத்தி லொன்றை யொன்று காணிற் பகையாற் கோபநீங்காத உச்சிக் கொண்டையினை யுடைய சேவற் கொடியானது எக்காலத்தும் வலது பக்கத்தை விட்டு நீங்காத சுப்பிரமணியக் கடவுளுக்கு மிகுந்த துணையாகவும்

நிலைபெற்ற தமது குலம் விளக்கத்தைப் பெறவும் வந்தனரென்று மகிழ்ந்து, அழகிய பூங்கொடிபோன்ற உமையவள் கொடுத்த கைவேலாகிய நன்மையைப் பெற்ற இச்செங்குந்தர்கள் பெருமைபோல இந்நாட்டில் வேறில்லை. எ-று. 16

செங்குந்தம் இத்தலங்களில் விசேடமாகப்
பூசிக்கப்படுமென்பதை விளங்கியது.

* பருப்பத மேரகம் பரங்குன் றம்பழம்
பொருப்பத மாவினன் குடிசெந் திற்பொது
விருப்பெனக் குன்றுதோ ரூடலா மெனுந்
திருப்பதி தமிலமர் செய்ய குந்தமே.

(இ - ள்.) முருகக்கடவுள் சமமான விருப்பத்தை யுடையவரென்று சொல்லும்படியான திருவேரகமென்னுஞ் சுவாமிமலையும், திருப்பரங்குன்றமென்னும் திருப்பரங்கிரியும், பழமுதிர்சோலை யென்னும் அழகிய அழகர்மலையும், திருவாவினன்குடி யென்னும் பழநியும், திருச்செந்தூரும், குன்றுதோரூடலாகிய திருத்தணியுமாமென்று சொல்லாநின்ற இவ்வாறு தலங்களினும் இச்செங்குந்தம் வீற்றிருக்கின்றது. எ-று. 17

செங்குந்தத்தினது மகிமை கூறியது.

தேடுவார் வலமாய் வந்து தெரிசிப்பார் சென்னி மீது
சூடுவார் மலரே தூவித் தொழுதகை கூப்பி நிற்பார்
பாடுவார் காவென் றெம்மைப் பரிவினா னந்த மாக
வாடுவார் குகன்கைச் செவ்வேற் கருந்துணைக் குந்தமென்றே.

---

* ஆறுபடைவீடுகள்:—1-திருப்பரங்கிரி - திருப்பரங்குன்றம் 2-திருச்சீரலைவாய் - திருச்செந்தூர், 3-திருவாவினன்குடி - பழனி, 4-திருவேரகம் - சுவாமிமலை, 5 குன்றுதோருடல் - திருத்தணிகை செருத்தணி, 6-பழமுதிர்சோலை - அழகர்மலை,

குன்றுதோரூடல் என்பது இவ்வாறு ஒன்றிலுமாடற் குறியவர் என்றது.

(இ - ள்.) உலகினுள்ளார் முருகக்கடவுள் கையின்கணுள்ள இரத்தத்தாற் சிவந்த வேலாயுதத்திற்குக் கிடைத்தற்கரிய சகாயமாகுங் குந்தமென்று கருதி செங்குந்தம் எவ்விடத் திருக்கின்றதெனத் தேடுவார். தங்கள் கண்களாற் கண்டு வலமாகவந்து தரிசிப்பார். மலர்களாலருச்சித்துத் தலைமீதணிந்து கொள்வார். பாதத்தில் வீழ்ந்து வணங்கி இரண்டு கைகளையுங்கூப்பி எதிராக நிற்பார். எம்மை யிரட்சிக்கக் கடவாயென்று அதன் புகழைப் பாடுவார். பின்னும் ஆசையோடும் ஆனந்தமாக ஆடுவார். எ-று. 18

செங்குந்தர் காளியின் கைத்தாளத்தைப்பறித்தமை கூறியது.

ஆலங்காட்டினி லரனுட னன்று வாதாடுங்
கோலங்காட்டிய காளிதன் கொற்றம்போய் வெள்கப்
பாலங்காட்டிய பன்மணித் தாளமே பறித்துச்
சீலங்காட்டிய குந்தர்நற் பெருமையார் தெரிப்பார்.

(இ - ள்.) திருவாலங்காடென்னுஞ் சிவத்தலத்திற் பரமசிவத்தோடக்காலத்து வாதாடுகின்ற கோலத்தைக் காட்டிய காளியினது வெற்றி கெட்டு வெட்க, அக்காளியினது கையின் கண்ணுள்ள ஒளியை வீசிய பலவிரத்தினங்க ளிழைத்த தாளத்தைப் பறித்துத் தமது மகிமையை யுலகத்திற் காட்டிய செங்குந்தர்களது நல்ல பெருமையை யார் சொல்லத் தக்கவர். எ-று. 19

செங்குந்தம் தம்மோடெதிர்த்த பகைவரைச்
சுவர்க்கத்தி லடைவிக்குமெனக் கூறியது.

செங்களம் பொருதிய திருந்த லாருர
வங்கமே மண்மிசை யாக்கி யாவியைச்
செங்கதிர் வழியிடைச் செலுத்தித் தேவர்க
ளங்களை வான்புகத் தருஞ்செங் குந்தமே.

(இ - ள்) போர்க்களத்தில் வந்து தம்மோடெதிர்த்து உயுத்தஞ்செய்த பகைவர்களாகிய அரக்கர்களது வலியவுடலை மண்மீது வீழச்செய்து, உயிரை சூரியன் மார்பின் வழியாக சுவர்க்க பதவியை யடைவித்துத் தேவர்களை வானுலகத்தினிலைபெற்றிருக்கச் செய்யும் செங்குந்தம். எ-று. 20

தவத்துக் கிடையூறு செய்வார் யாரேனும் அவரை
செங்குந்தர் வருத்துவரேன்பதை விளக்கியது,

பரகதி வேள்வி பண்ணு மிருடிதன் பான்மை பாரா
வரகதி தந்தை யேவு மமரரை மடிய நூறி
யிரதமோ டிவுளி வேழ மியாகதா னத்துக் கீந்து
சிரமணி மகுடம் பெற்ற செங்குந்தர் போலு முண்டோ.

(இ - ள்.) மோட்சகதியை முருகக்கடவுளாற் பெறும் பொருட்டு ஒரு யாகத்தைச் செய்யு முனிவனது வயிராக்கியத் தன்மையை நோக்கிப் பிரமதேவன் தனது மேலான பதவியைக் கொடுக்கும் பொருட்டு அமரரையேவ, அதற்குத் தான் விரும்பிய தல்லதன்றென மறுத்த முனிவனை யெதிர்த்ததால் அவ்வமரரைப் போர்க்களத்தின் மடியக்கொன்று அவர்கள் இரதங் குதிரை யானை யிவைகளை அவ்வியாகத்துக்குத் தானமாகக் கொடுத்து அவர்கள் சிரசிற்றரித்த இரத்தின கிரீடங்களைக் கைக்கொண்ட செங்குந்தர்களைப்போலு மிவ்வுலகத்திலுண்டோ. எ-று. 21

செங்குந்தம் தபோபலத்தைக் கோடுக்குமேன்பதை
விளக்கியது.

அம்பாழி மூழ்கியொரு கற்பமெலாங் கிடைக்கினுமென்
னழலி னின்று
வெம்பாமே வெளிக்காலுண் டுட்காலை வெளியில்விடா
திருந்தா லென்னே

வம்பாரு மிதழியணி வேணியனார் வேதமலை
வலம்வந் தீண்டுஞ்
சம்பாதிக் கழுதளிக்குஞ் சயக்குந்தம் போல்வினவத்
தாரா வன்றே.

(இ - ள்.) ஒரு கற்ப காலமெல்லாஞ் சமுத்திரத்தில் மூழ்கித் தவஞ்செய்திருக்கக் கிடைக்கினும் யாது பிரயோசனத்தைத்தரும். பஞ்சாக்கினி மத்தியினின்று சரீரம்புழுங்காமல் வெளியிலுலாவுகின்ற காற்றை ஆகாரமாகக் கொண்டு உள்ளிருந்து இடைப்பிங்கலையின் வழியாகப் பன்னிரண்டங்குலஞ் செல்லா நின்ற காற்றைக் கும்பித்துச் சுழிமுனையிற் செலுத்தி யோகஞ்செய்து ஒரு கற்பகால மிருந்தாலும் யாது பிரயோசனத்தைத் தரும். வாசனை பொருந்திய கொன்றை மாலையைத் தரித்த சடாமகுடத்தையுடைய வேதகிரிநாதர் வாழுகின்ற திருக்கழுக்குன்றத்தை வலமாகவந்து நெருங்கிய இராமாயணத்திற் சொல்லிய சடாயுவென்னுங் கழுகரசனது தமையனாகிய சம்பாதிக்கு மோட்சத்தைக் கொடுக்கும் வெற்றி பொருந்திய நவவீரர்களது செங்குந்தம்போலக் கேட்டவுடன கொடுக்க மாட்டாதன மற்றைத் தவங்கள். எ-று. 22

செங்குந்தத்தலைவர்கள் சிவசமய பரிபாலரெனக் கூறியது.

உருக்கொடு பணியா தாரை யுளத்திலெந் தெழுத்தை யுன்னிப்
பெருக்கொடு தவள நீற்றைப் பேணியே யணியா தாரைத்
தருக்கொடு நின்று கண்ணீர் ததும்பமுன் னுடா தாரைத் [ப்
திருக்கோயில்வலம்வாராரைச் சினத்தொடுபொருஞ்செங்குந்த

(இ - ள்.) பரமசிவனை மனவுருக்கத்தோடு வணங்காதவரையும், பஞ்சாக்கரத்தைத் தமதுள்ளத்தில் தியானித்து வெள்ளிய திருநீற்றை மிகுதியாக விருப்பத்தோடு திருமேனியிற்றரித்துக் கொள்ளாதவரையும், தவச்செருக்கோடு எதிராக நின்று ஆனந்தக்கண்ணீர் ததும்ப நடனஞ் செய்யாதவ

ரையும், சிவாலயங்களை வலஞ் செய்யாதவரையுங் கோபத்தோடு சங்கரித்து விடுகின்ற பத்திமான்கள் இச்செங்குந்தத் தலைவர்கள். எ-று. 23

சேங்குந்தம் இவ்வாறு செய்த வடியார்களைச்
சிவலோகத்தை யாளவைக்குமெனக் கூறுயது.

கூவிளை யிதழி தும்பை கொண்டரிச் சித்த பேர்க்கு
மூவர்தம் பாடலோதி முன்னின்று பணிந்த பேர்க்கு
மாவலோ டைந்தெழுத்தை யகத்துள்ளே நினைந்த பேர்க்குந்
தேவர்நா டாள வைக்குந் திருக்கைவேற் றுணைச்செங் குந்தம்.

(இ - ள்.) பரமசிவனை வில்வத்தளிர்களுங் கொன்றை மலர்களுந் தும்பைமலர்களுங் கைக்கொண் டருச்சனைசெய்த அடியார்களையும், அப்பர் சம்பந்தர் சுந்தரமூர்த்திகளாகிய மூவராற் சொல்லிய தேவாரப்பாடலைத் தோத்திரஞ்செய்து எதிராகநின்று வணங்கின அடியார்களையும் ஆசையோடு பஞ்சாக்கரத்தை யுள்ளத்தில் தியானித்த வடியார்களையும், மகாதேவரது சிவலோகத்தை யாளும்படி செய்விக்கும் முருகக் கடவுளது அழகிய கையின்கண்ணுள்ள வேலாயுதத்தைத் துணையாகவுடைய செங்குந்தம். எ-று, 24

குந்தத்திற்கு ஒப்பின்மை கூறியது.

ஆலமார் மிடற்று ராடு மாடலே யாட லம்மை
யேலவார் குழலா ளங்கைத் தாளமே தாள மேந்துஞ்
சூலமா குவதன் னுன்கைச் சூலமே சூல் மற்றிக்
கோலம்வாழ் வீரர் கையிற் குந்தமே குந்த மாகும்.

(இ - ள்.) விடம்பொருந்திய கண்டத்தினையுடைய சதாசிவமூர்த்தி சர்வ சம்மார காலத்திற்செய்யு நடனமே நடனம். அக்காலத்து மயிர்ச்சாந்து பொருந்திய நீண்ட வளகத்தையுடைய தாயாகிய ஞானசத்தி யந்நடனத்திற்குத் தக தன்கைத்

யாற்கொட்டிய தாளமே தாளம். சூலமாவது அச்சதாசிவந் தனது கையிற்றாங்கிய சூலமே சூலம். அதுபோலவே யழகு வீற்றிருக்கின்ற நவவீரர் கையிற்கொள்ளுங் குந்தமே குந்தம். எ-று. 25.

சேங்குந்தப்பெருமை இத்தன்மைத்தெனக் கூறியது.

ஆதிநா ளுமையவ ளளித்த குந்தமே
சாதிநா லுவப்புடன் றலைக்கொள் குந்தமே
காதிமே வலரையுங் கல்லுங் குந்தமே
கோதினம் பாடலே கொள்ளுங் குந்தமே.

(இ-ள்.) நம்மாற் சொல்லப்பட்ட குற்றமற்ற பிரபந்தத்தை அங்கீகரித்துக் கொள்ளுங் குந்தமானது முன்னாளில் உமையவளாலே வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களுக்குக் கொடுக்கப்பட்ட குந்தமாகும். அந்தணர் அரசர் வைசியர் சூத்திரரென்று சொல்லாநின்ற நான்கு வருணங்களும் களிப்புடன் தங்கள் தலைமீது வைத்துக்கொள்ளும் குந்தமாகும். தன்னை வணங்காதவரைக் கோபித்து உலகத்தில் நிலைபெறாது அழிக்குங்குந்தமாகும். எ-று. 26.

இதுவுமது.

கருதலர் பொடிபடக் கருதுங் குந்தமே
விருதுடைச் சூர்முடி வெட்டுங் குந்தமே
பொருதணிப் புலிக்கொடி புனையுங் குந்தமே
தருதலத் தருவெனத் தருஞ்செங் குந்தமே.

(இ-ள்.) பொருதற்குக் காரணமாகிய ஒப்பற்ற புலிக்கொடியை அலங்காரமாகத் தரித்துக்கொள்ளு மிச்செங்குந்தமானது, பகைவர்கள் முடி பொடிபடச் செய்தலே துணிவாகக் கருதுங் குந்தமாகும். வெற்றி விருதுகளையுடைய சூரபதுமன் முதலிய அவுணர்களுடைய தலைகளை வெட்டிய

குந்தமாகும். அடுத்தவர்க்குக் கொடுத்தலில் கற்பகமுதலிய அந்தப் பஞ்ச தாருவைப்போலக் கேட்ட எப்பொருளையுங் கொடுக்கவல்லது இச்செங்குந்தமாகும். 27

இதுவுமது.

கைலைமால் வரையையுங் காக்குங் குந்தமே
யயிலைநற் றுணையென வாக்குங் குந்தமே
வெயிலைமன் மணிகளின் மிளிருங் குந்தமே
மயிலைவா கனமென வாக்குங் குந்தமே.

(இ - ள்.) இச்செங்குந்தமானது உயர்ந்த கைலைமலை முதலிய சிவனிடங்களெல்லாங் காக்கின்ற குந்தமாகும். வேலாயுதத்தைத் தனக்கு நல்ல துணையென ஆக்கிக்கொள்ளுங் குந்தமாகும். பிரகாச நிலைபெற்ற நவரத்தினங்களைப் போல ஒளிருங் குந்தமாகும். சூரபதுமனாகிய மயிலை முருகக் கடவுளுக்கு வாகனமாக ஆக்கிய குந்தமாகும். எ-று. 28

செங்குந்தர்களுக்கு முதலியரென்னுநாமம்
வந்ததற்குக்காரணங் கூறியது.

இந்திர னயன்மா றேவர் யாவர்க்கு முதன்மை யாக
வந்தபான் மையினாற் சூல மழுப்படை யத்த னார்க்கு
முந்திய நாமந் தானு * முதலிய ராகை யாற்செங்
குந்தர்சந் ததிக்கு மப்பேர் முதலிய ரென்று கூறும்.

(இ - ள்.) இந்திரன் பிரமன் விட்டுணுமுதலிய தேவர்கள் யாவருக்கும் முதன்மைபாக ஆதியிலெழுந்தருளி வந்த தன்மையால் சூலமும் மழுவாயுதமுந் திருக்கையிலுடைய பரமசிவனுக்கு ஆதிநாமம் முதலியரென்று வந்த தாதலால்

---

* இக்காலத்து முதலியரென்பது முதலியாரென மரீஇயது. கைக்கோளர் என்றும் வழங்குகிறது.

அம்மரபில் வந்த செங்குந்தர் சந்ததிக்கும் முதலியரென்று அந்த நாமத்தையே உலகங்கூறும். எ-று. 29

முசுகுந்தச்சக்கரவர்த்தி தவஞ்செய்து வீரவாகுதேவர்
முதலிய நவவீரர்களைத் துணைவராகப் பெற்றானென்
பதூஉம், அந்த நவவீரர் சந்ததி வருக்கங்களே
இந்தச் செங்குந்தத் தலைவர்களென்
பதூஉங் கூறுயது,

முந்தை நோன்பினன் முருக வெண்முசு
குந்தனுக் கொன்பான் குமர ரைத்தர
வந்த வீரரிவ் வகிலம் வென்றிசை
தங்க குந்தரித் தகுசெங் குந்தமே.

(இ-ள்.) ஆதியில் முசுகுந்தச்சோழன் சட்டிவிரதத்தினை முறைமையாகச் செய்தமையால் அவனுக்கு முருகக்கடவுள் தம திளவலராகிய நவவீரர்களைத் துணைவர்களாகத் தர, அந்த வீரர்க ளிவ்வுலகின்கணுள்ள அரசர்களையெல்லாஞ் செயங்கொண்டு அந்தச் சோழனுக்குச் சக்கரவர்த்தியென்னும் புகழை நிலைபெறச்செய்த குந்தராவர். அவர்கள் சந்ததிகளே இந்தப் பெருமைபொருந்திய செங்குந்தர். எ-று.

இனியிதன்வகை வருமாறு.

ஆதியில் விதூமனென்னுங் கந்தருவராசன் சுகுமாரியென்னுமோ ரிருடிபத்தினியை விழைந்து அவளான் முசுவாகுமாறு சாபமேற்றுக் கைலைமலையின்கண்ணுள்ள ஓர் பூங்காவில் பல முசுக்களுக்கிறையாகி அங்கோர்கால் வில்வவிருக்கத்தடியி லெழுந்தருளிய உமா ரமேச்சுரரை யவ்வில்வப் புத்திரங்களால் அபுத்தி பூர்வகமாக வருச்சனைசெய்து அவ்வருச்சனைப்பெற்றால் சூரிய பரம்பரையாகிய மனுகுலத்தில் எண்பத்தீராயிரவருட மேகச்சக்கராதிபதியாயிருந் தரசியற்றும் வரத்தினைப்பெற்று முசுகுந்தச்சோழ னென்னும்படிக் கவதரி

ந்துக் காவேரிநதியாற் சூழ்ந்த கருவூரை இராசதானியாகக் கொண்டு தனது முன்னோர்களைப்போலத் தானுந் திக்குவிச யஞ்செய்து சக்கரவர்த்தி யாமாறு விரும்பி அதற்குத்தக்க துணைவர்களை வேண்டி முருகக்கடவுளுடைய சட்டிவிரதத் தினை யனுட்டிக்க, அதற்கவ ரிலக்கத்தொன்பான் வீரர்களோ டும் பூதகணங்களோடு மயில்வாகனருடராய்ப் பிரசன்னமாகி வர, அதுகண்ட சோழன் தனது விழைவைக்கூறி இவ்வீர வாகுதேவ ராதிய தேவவீரனுசர்கள் யாரும் எனக்குத் துணை வர்களாமாறு கிருபைபுரிய வேண்டு மென்றிரக்க, அது கேட்ட கந்தவேள் நவவீரர்களைநோக்கி நீவி ரிவ்வரசன்பாற் சென் றிவன்றுணைவர்களா யிருக்கக்கடவீரெனக் கட்டளை யிட, அதுகேட்டவுமவர்கள் தேவரீரதேவவின்படி ஆயிரத் தெட்டண்டங்கட்கு மதிபனாகிய சூரபன்மாதிய தேவகண்டக ரை யெல்லாம் போரிலொழித்து வெற்றி கொண்டிருக்கும் யாங்கள் இச்சிறுமானிடன்பாங்க ரெய்தி இவனைப் பணிக் கப்படு மிழிதொழில்களைப் புரியகில்லோமென மறுக்க, அத ற்கு முருகவேள் சினந்து நீவிர் நமதாணையை மறுத்ததனால் அதுவே காரணமாகச்சென் றிவ்வுவனி வேந்தன் பாலிருத்த லே வேண்டு மென்றுகூற, அக்கால் நவவீரரும் பயந்து தொழுதெழுந்து சுவாமீ! அறிவிலேங்கள் செய்த பிழையி னைப் பொறுத்துக் காத்தருளல் வேண்டுமென்றிரந்து அம் முகமுகச் சோழனுக்குத் துணைவர்களாமாறு மானவவுரு வேற்று நின்றார்கள்.

அதுகண்ட சண்முகதேவர் திருவுளமிரங்கி யவர்களைப் பரிந்துநோக்கி இவ்வேந்த னுலகிலிருக்கின்ற நாள்காறும் இம் மானவ வடிவமாய்ச் செங்குந்த மன்ன னென்னுஞ் சிறப்பு நாமத்தோடு இவன் சுற்றத்தி னருந்துணைவர்களுமாகிப் பரம் பரைபெருக நின்று பின்னர் நம்மைநோற்று வானவ வடிவாகி மீண்டு நம்பாற் சேர்மின்களெனத் திருவருள்செய்ய, உடனே

யவர்கள் பூர்வம் சக்கரதரனுகிய விண்டுவானவர் தேவேந்திர னுக் கிளவலாய் அவன்பி னுபேந்திரனென்னும் பேர் வழங் கச் சென்றவாறு போலத் தம்பின்னவராகிய விலக்கத்தவ ரோடு தமதீட்டியென்னும் படையுடன் முசுமுகச்சோழன் பக்கலிற் போய் நிற்க, அக்கால் சண்முகதேவ ரக்காவலனை நோக்கி இவ்வீரர்கள் நமக்குத் துணைவர்களாய்ச் சூரபன்மா திய பகைவர்களைக் கொன்று அவர்களுதிரத்தாற் சிவந்த குந் தப்படையினைக் கரத்திற்கொண்டு இனி யுனக்குந் துணைவர்க ளாக விருப்பதன்றி உன் சேனைகட்குங் காவலராக விருக்கப் படுவோராதலால் இன்றுமுத லிவர்கட்குச் செங்குந்த மன்ன ரென்றுஞ் சேனைத்தலைவரென்றும் பெயர் வழங்குக; நீ யிவர் களை நம்மிடத்தில் வரப்பிரசாதமாகப் பெற்றுக்கொண்டதால் இதுமுத லுன்பெயராகிய முசுவென்னு நிலைமொழியோடு குந்தமென்னும் வருமொழியைப் புணர்த்தி உன்னை மூவுல கத்தினரு முசுகுந்தனென் றழைக்கக்கடவர் எனத் திருவாய் மலர்ந்து பூதகணங்களோடு மயில் வாகனத்தினை நடத்தித் தமது கந்தவெற்பினு மவர்களுள்ளக் கோயிலினு நற்றுணை யொப்ப நண்ணியிருந்தனர்.

உடனே முசுகுந்தச்சோழன் தனது கருவூரென்னுந் திரு நகருக்கருகே பல வரண்மனைகளு மடவளாகங்களுஞ் சிற்பர் களைக்கொண்டு சமைப்பித்து அவற்றில் மகா விபவத்துடன் வீரவாகு தேவராதிய வொன்பதின்மரையு மிலக்கத்தவரையு மிருத்தித் தனதுறவின ராண்மனைகளிற் சிறுமியர்களா யவ தரித்திருந்த தேவமாதர்களை யவர்கட்குக் கடிமணம் புரிவிக்க அவர்களுட் சேட்டரான வீரவாகுதேவர் தமது மனைவியாகிய புட்பகந்தியாரால் சித்திரவல்லி யென்னு மொரு பெண்மக வையும் அனகன் சனகனென்னு மிரண்டாண்மகவுகளையுந்தர இவ்வாறே மற்றைய வீரர்களும் தத்தமது மனைவியர்களால் ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூற்றெட் டாண்மகவுகளை

யும் அளவற்ற பெண்மகவுகளையும் பெற, இம்மக்கள்பலரோ டிலக்கத் தொன்பதின்மரு மனுகுலந்தழைக்க வாழ்வுற்திரு ந்து அம்முசுகுந்தச் சோழனோடுந் திக்குவிசயஞ் செய்யச் சென்று இவ்வுலகின்கணுள்ள மன்னர் மண்டலீகர்களை யெல் லாம் வென்று அச்சோழனுக்குச் சக்கரவர்த்தி யென்னுஞ் சிறப்புப் பெயரையுந் தாமவனுக்கு துணைவரென்னும் பெரும் புகழையும் எங்கு நிலைபெறச் செய்தனர். அவர்கள் சந்ததிக ளாகிய ஆயிரத்துத் தொளாயிரவரின் வருக்கத்தினரே இந்தப் பெருமை பொருந்திய செங்குந்தரென வறிக.

செங்குந்தத் தலைவர்கள் சத்த தியாகரையுங் கொண்டு வந்து உலகத்தில் தாபித்தமை கூறியது.

விண்டுமார்பத் திடையிருத்தி வேலைக்கௌரி பணிமாறப்
பண்டுபூசித் திடுங்காலை யாகண்டலன்போய்ப் பாற்கடலின்
வண்டுழாய்மா யனைவணங்கி வானிற்பழிச்சுந் தியாகரைமேற்
கொண்டுபோந்து பாரின்முசு குந்தற் குதவுஞ் செங்குந்தம்.

(இ - ள்.) பூர்வத்தில் திருமாலானவர் தியாகராயரைத் தமது மார்பின்கண் எழுந்தருளச்செய்து பாற்சமுத்திரத்திற் பிறந்த இலக்குமி பணிசெய்யும்படி பூசித்திருக்குங் காலத்தில் இந்திரன் வாற்கலி யசுரனால் துன்பமடைந்து திருப்பாற்கட லிற் பள்ளிகொண்டிருக்கும் வள்ப்பம் பொருந்திய துளப மாலையை யுடைய அவ்விண்டுவை வணங்கி அவரா லத்துன் பத்தை நீக்கிக்கொண்டதுமன்றி அத்தியாகரையும் பெற்றுச் சுவர்க்கத்திற் கொண்டுபோய்த் தான் பூசித்துவருங் காலத்து வலனென்னும் அவுணனோடு நெடுநாளாக யுத்தஞ் செய்தும் அவனைப் புறங்காணக் கூடாமையாற் பூமியின்கண் முசுகுந் தச் சக்கரவர்த்திக் கறிவிக்க, அவர் வீரவாகுதேவர் முதலிய தனது சதுர்வித சேனைகளாலும் அவனை யழித்தகாலத்து இந்திரன் மகிழ்ந்து நவவீரர்களைப் பார்த்து நீங்கள் செய்த

நன்றிக்கு என்பாலுள்ள பொருள்களில் வேண்டுவனவற்றைக் கேளுங்கள் கொடுப்பேனென, அவர்க ளழிந்துபோகு மற்றைய பொருள்களை விட்டு அழியாததா யவனுன்மார்த்தமாகப் பூசிக்குந் தியாகரைக் கேட்க, அதையவன் கொடுக்க மன இல்லாமையால் விசுவ கர்மாவினலாறு தியாகரைச் சிருட்டி செய்வித்து ஒவ்வொன்றாகக் கொடுக்க, அஃதல்லவல்லவென் றவர்கள் மறுத்து மூலவிக்கிரகத்தைக் கேட்க, அக்கால் மறுக்கக் கூடாமையால் அவனுன்மார்த்தத்தையுங் கொடுக்கப்பெற்று அரசனாகிய முசுகுந்தச் சக்கரவர்த்திக்குக்கொடுத்துத் திருவாரூர் முதலிய சத்தத்தலங்களிலுந் தாபித்து வைத்தது அவர்கள் கையிற்றாங்கிய செங்குந்தம். எ-று. 31

செங்குந்தத் தலைவர்கள் கிளிப்பிள்ளையின்பொருட்டு
இயமனுக்குத் திருமுகஞ் செலுத்தினமை கூறியது.

பிள்ளையாருயிர்க் குறுந்துணை யாத்தனிப் பேறெய்துங்
கிள்ளையாரிவண் கொடுவரு கென்றுடலங் கீறிக்
கொள்ளையாருயி ரெரிநரகுறவடுங் கூற்றுயிர் நனிசோர
வள்ளியாவரு நடுக்கத்தந் திருமுகமே செலுத்தொண்குந்தம்,

(இ-ள்.) முசுகுந்தச் சக்கிரவர்த்தியினது மனைவியாயும் வீரவாகுதேவரது பெண்ணுமாகிய சித்திரவல்லி யென்பவள் வளர்த்த தன்னுயிர்க்கு மிகுந்த துணையாகும்படியான ஒப்பற்ற தவப்பேறைப் பெற்ற கிளிப்பிள்ளையை உமது தூதர்கள் திருடிப் போயினதாகக் கேட்டோம் அதை யிங்கிமிட மிங்கு கொண்டுவரக் கடவரென்று இதைக் கருதிய யாவரு நடுநடுங்கும்படி வீரத்தைச் செலுத்தி உலகத்திலுள்ள உயிர்களுடைய உடலங்களைக் கிழித்து மிகுதியாக நிறைந்த வுயிர்களை எரிகின்ற நரகத்திற் பொருந்தக் கொல்லுகின்ற யமனுக்கு அவனுயிரும் பதைபதைக்கும்படி தமது திருமுகத்தை யனுப்பியோர் விளக்கமான செங்குந்தத் தலைவர்கள். எ-று. இது தொகை. 32

இனியிதன்வகை வருமாறு.

இவ்வுலகின் முசுகுந்தச் சக்கரவர்த்தி வீரவாகு தேவராதிய துணைவர்களைக்கொண் டரசியற்றி வருங்கால் ஓர் பிரளய முண்டாகிச் சராசரங்களெல்லா மழிவெய்தவும் அவரத் துணைவர்களோடு கிளியுருக்கொண்டு பறந்து சொர்க்கலோகஞ் சென்று காலங் கழித்திருக்கையில் ஓர் நாள் சிவதரிசனார்த்தமாகக் கைலையங்கிரியை யடைந்து நந்திதேவ ரனுமதி பெற்றுத் திருவோலக்கத்தின்கண் சென்று உமாபரமேச்சுரரை வணங்கிநிற்க, அவரைச் சிவபிரான் பார்த்தருளி நீ இங்ஙனம் யாதுவேண்டி வந்தனையென வினவ, அதற்கவர் தாம் வருதற் கேதுவான காரணத்தைக் கூற, அதுகேட்ட கங்காதரக்கடவுள் பிரளய மிப்போது நீங்கினமையால், இனி யுலகிற்சென் றரசியற்றலாமெனத் திருவாய் மலர்ந்தருள, அதற்குச் சக்கிரவர்த்தி யானுலகிற்சென் றியாவர்பா லரசியற்றுவேனென்று முறையிட, அப்போது உமாபதி பிரளயத்தான் மாண்ட உயிர்களையெல்லாம் பிரமனாற் பழையபடி சிருட்டிப்பித் துணர்த்த, அக்காலரசரேறு திரிபுராந்தக மூர்த்தியைத் தீர்க்கதெண்டஞ் செய்தெழுந்து சுவாமீ! அடியேன் தேவரீர் குமாரர்களாகிய வீரவாகு தேவராதிய துணைவர்களால் உலகின்கண்ணுள்ள பல வரசர்களையெல்லாம் வென்று ஏக சக்கராதி பத்தியங்கொண் டிருக்கின்றே னாயினும் இதுகாறுமெனக் கில்லற நடத்தற் பாலளாய பத்தினியில்லாமையால், இனியா னுலகிற்சென் றிராச்சிய பட்டாபிடேகஞ் செய்துகொள்வ தெவ்வாறென்று விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்ட சதாசிவப் பெருமான் வீரவாகுதேவரைக் கூவி, ஓ உப சுப்பிரமணியனே! இவ் வரசனுக் குனது புத்திரியைப் பாணிக்கிரகணஞ் செய்து கொடுத்திடுகவென் றுத்தரவுசெய்து சக்கரவர்த்திக்கு விடைகொடுத் தருளினர். உடனே வீரவாகு தேவர் சுரேந்திர குமாரனாலுஞ் சுரேந்திர காந்தையினாலுஞ்

சன்மானிக்கப்பட்டுள்ள தமது தம்பியாதிய வாடவர்க்கும் தாரமாதிய பெண்டீர்க்குஞ் சிவபெருமானுடைய அருளுப் பாட்டினை யுணர்த்தி அரி பிரமேந்திர ராதிப வமரர்கண் முன்னிலையில் வசிட்டராதிய முனி புங்கவர்களைக்கொண்டு திலீபச் சக்கரவர்த்தி குமாரனாகிய முசுகுந்தச் சக்காவர்த்திக்கும் தமது குமாரத்தியாகிய சித்திரவல்லிக்கும் திருக்கல்யாண மகோற்சவத்தினை நடாத்தி நிறைவேற்ற, அஃது நிறைவேறியபின் சக்கிரவர்த்தியானவர் பூவுலகிற்குச் செல்லுமா றுத் தேசித்தவராய் தன் மாதுலனாகிய வீரவாகுதேவருக் கறிவிக்க. அவர் தமது தம்பியர்க்கு மனைமக்களாதிப சுற்றத்தினர்க்கு மதனைத் தெரிவிக்க, அஃதுணர்ந்த யாவரும் பிரயாணமாகுங்கால் இந்திராணியானவள் தன்னிட மமுதபோசனமுண்டருமறைபாதிகள் பயின்றுள்ள ஓர் பொற்கிள்ளையினைத் தனக்குச் சொக்காதி பத்தியத்தை யளித்த வீராதிவீரர்களுடைய அருமருந்தன்ன குமாரத்தியுஞ் சச்காவர்த்தி மனையாளுமாகிய சித்திர வல்லிக்குப் பரிசாகத்தந் தாசீர்வதித்தனுப்ப, பின்னரச் சக்கரவர்த்தி தம்பதி கோலத்தராய் வீரவாகு தேவராதியரோடு கைலையங்கிரியை யடைந்து அம்மையப்பரை வணங்கி விடைபெற்றுப் பழையபடி பூவுலகில் வந்து அழிதலுற்ற வரண்மனை யாதிகளை விசுவகன் மனைக்கொண்டு புதுக்கி மாண்டுயிர்த்த மானிடர் யார்க்கும் வருணச்சிரம தருமங்களை விதித்து இராச்சியப்பட்டாபிடேகம்பெற்றரசிபற்றி வந்தனர்.

அக்கால் புலோமசை யிடத்தி னின்றுஞ் சித்திரவல்லி பெற்று வைத்திருந்த பொற்கிள்ளையை இயமன் மனைவி யிச்சித்து தன்கணவனுக்கறிவிக்க, அவனதுகேட்டு நடுங்கி யச்சித்திர வல்லியின் றந்தையருடைய செயவீர பராககிரமத்தினைக் கூறிப்பயமுறுத்த, அதற்கவள் சற்று மிணங்காளா யவனோடிச் சலிக்க, அதுபொறாத காலன் பின்வரும் விளைவை யறி

யானுய்த்தனது தூதரை யேவி அதனைக் கவர்ந்து வரச்செய்து தன் மனைவிக்குக் கொடுக்க, பின்னர் தாதியராற் கிள்ளை காணு தொழிந்ததைச் சித்திரவல்லி கேட்டுத் தனது கணவ னுக் கறிவிக்க, அவர் சில தூதரா லஃதிருக்குமிட முணர்ந்து வீரவாகு தேவருக்குத் தெரிவிக்க, அவருடனே இவ்வுலகின் கண்ணுள்ள உயிர்களினுடலங்களைக் கழித்து அவ்வுயிர்களைக் கவர்ந் தெரிகின்ற நரகிற் கிடத்திக் கொல்லுகின்ற அவ்வியம னுயிரும் பதைபதைக்கும்படி (என தருமப்புகல்வியு மிவ்வுல கடங்கலுக்குஞ் சக்கரவர்த்தினியு மாகிய சித்திரவல்லியால் வளர்க்கப் பெற்றிருந்த கிளிப்பிள்ளையை உனது தூதர்கள் திருடிப் போயினதாகக் கேட்டோ மாதலால், அதனை யிந் நிமிட மிங்கு கொணர்ந்து வந்து சேர்க்கக் கடவாய்) என்னோர் திருமுகம் வரைந்து அத்திமுகத்தைக் கருதிய யாவரு நடுங் கும்படி வீரத்தைச் செலுத்தி, அகோராத்திர மென்னுந் தேவப்படையில் வைத்தவனுக் கனுப்பினரென வறிக.

அத் திருமுகத்தினைக் கண்ட நமன் தன் மனைவியினிடம் போய் அதனைப் படித்துக்காட்டி, என் காதலி! இதனை வரை ந்து விடுத்த வீரதேவனையு மவன் றுணைவர்களையு மிலேசாய் நினையற்க, அவர்களை வெல்லுதற் கயனுதிய மூவர்க்கு மரிதா கும். ஆகலி னிக்கிள்ளையைக் கொடு நான் சென்றவர்களை வணங்கிக் கொடுத்துவிட்டு வருகின்றேன். என்றிதவாய்ப் பலவிதங்களிற் கூறியு மவள் கொடுக்க மனமில்லா திருந்த மையால் அச் சமனென்றுந் தோன்றுதவனுய் (உமது திரு முகத்திற் கண்டெழுதியுள்ள கிள்ளை மீட்டு மங்ஙனந் திரும் புதலரிது) என்று பதிலெழுதி அவ்வத்திரத்தின் மூலமாகவே விடுத்தனன். அதனைக் கண்ட வீரவாகுதேவர் உடனே தமது சகோதரர்களோடு சதுரங்கச் சேனைகளும் புடைசூழ வெளிக் கொண்டு சமனுவதிப் பட்டினஞ் சென்று முற்றுகை செய்து இயமனோடு கடும்போர் விளைத்து வென்று அவனைத் தமது

தேர்க்காலி லிறுகக் கட்டிக் கொணர்ந்து தங்கள் மருமானெதிரில் நிறுத்த, அதுகண்ட சக்கரவர்த்தி மனதிரங்கி அந்த நம்பனைக் கட்டவிழ்த்துவிடச் செய்ய, அவன்றனது தூதரையேவித் தன் மனைவசத் திருக்கும் பிள்ளையைத் தருவித்துக் கொடுத்துச் சமாதானஞ் செய்துகொண்டு தனது பட்டினஞ் செல்ல, அக் கிள்ளையைச் சக்கரவர்த்தி கையேந்திச் சென்று தன் மனையாளுக் களித்து மகிழ்வித்தனர்.

இஃதும், "முந்தைநோன்பினுன்" என்னுந் திருவிருத்தத்திற்குக் கூறிய வஃதும், காந்தபுராணத்திற் கொத்துப் பாடாந்தர புராணத்தில் காண்க.

## சேங்குந்தத்தலைவர்கள் கேரள தேசத்தரசனை வென்றமை கூறியது.

வடிவே லெடுத்த மனுதுங்க
வளவன் றேவி வெதுப்பாற
முடிவேள் வியிற்செந் தீத்தருகான்
முளைமாங் கனிக்காக் குடநாட்டைச்
செடிவே ரறுத்துச் சிறைபிட்டுச்
சென்னி வியப்பத் திறைபோலக்
கொடிவாண் முரசு களிறுபரி
யிரதங் கொடுக்குஞ் செங்குந்தம்.

(இ - ள்.) கொல்லனுலையில் வடிவெடுத்த வேலாயுதத்தைக் கையிற்றாங்கிய மனுநீதி தவறாத பெருமை பொருந்திய முசுகுந்தச்சோழன் மனைவியாகிய சித்திரவல்லியானவள் கேரளதேசத்து அரசன் செய்வித்த யாகாக்கினி தந்த சந்தான மாங்கனி கிடையாததாற் கொண்ட வெப்பமானது நீங்க, வீரவாகு தேவரது தம்பிமார்கள் குடநாட்டிலுள்ள அம்மாமரத்தை வேரோடு பிடுங்கிக்கொண்டு தங்கள் ரசனாகிய சோழராசன் ஆச்சரிய மடையும்படி அக்கேரள ராசனைச் சிறை

யீட்டு அவனது கொடி வாள் பேரிகை யானை குதிரை தேர் இவைகளைத் திறைபாகக் கொண்டுவந்து கொடுக்கும்படி செய்தது இச் செங்குந்தம். எ-று. 33

செங்குந்தத் தலைவர்கள் யாழ்ப்பாண தேசத்தை
வென்றமை கூறியது.

ஆழநீள் கடற்கு மாங்கோ ரம்பிமேற் சென்றே யப்பாற்
சூழ்ந்திருச் செந்தூ ருற்ற சுபனென்பான் றுணையாக் கொண்டு
வாழிரா சாதி ராச மன்னவன் மருவ லான்ற
னீழநா டொருநா டன்னிற் றிறைகொண்டு டுற்ற குந்தம்.

(இ-ள்.) செங்குந்தர் ஆழமு நீட்சியையுமுடைய கடலைத் தாண்டுவதற்கு ஓர் கப்பலின்மேற் சென்று அக்கடலினாற் சூழப்பட்ட திருச்செந்தூரென்னுந் திருப்பதியிற் சென்றிருந்த சுபனென்னுஞ் செங்குந்தனைச் சகாயமாகக் கொண்டு மேலான செல்வத்தோடும் வாழாநின்ற இராசாதிராசனுகிய தங்களது சோழமகாராசனுக்குச் சத்துருவாகிய யாழ்ப்பாண தேசத்துக் கரசனை ஒருநாளிற் செயங்கொண்டு ஆங்குள்ள பொருள்களனைத்துங் கப்பமாகக் கைக்கொண்டு திரும்பி வந்தனர், எ-று. ஆங்கு அசை. 34

உற்றன ரென்பது உற்றவெனக் குறைந்து நின்றது,

கௌதனென்னுஞ் செங்குந்தத்தலைவன் உச்சினி முதலிய
தேசங்களை வென்றமை கூறியது.

மச்சநா டுடைய கோமேல் வங்கநா டாளு மன்னன்
குச்சர வரசற் காக சமரமேற் கொண்டு கொற்றக்
கைச்சலி யாமற் கொல்லுங் காலையிற் கௌத னென்பான்
உச்சினி தொடங்கிப் போர்செய் குந்தம்போ லுலகி லுண்டோ

(இ-ள்.) வங்காநாட்டை யாளுகின்ற அரசனானவன் குச்சரதேசத் தரசனிமித்தம் மச்சதேசத்தரசன்மேல் யுத்தத்தை மேற்கொண்டு வெற்றிபொருந்திய தன்கை சலிப்பின்றிச் சங்

கரிக்கும் காலத்துச் சோழதேசத்துச் சக்கரவர்த்தியாகிப் கௌதமனென்னுஞ் செங்குந்ததலைவன் கோபமீறி, உச்சினி தேசந்தொடங்கியவர்கள் தேசங்களை யெல்லா நாசம்பண்ணி யடங்கச் செய்தானாதலால் இக்குந்தம்போ லுலகிலுண்டோ.

படைமருதனென்னுஞ் செங்குந்தத்தலைவன் சிறக்கையா
னென்னு மரசனை வென்றமை கூறியது.

இடைமரு தூரிற் சாப மேந்திய சிறக்கை யானை
புடைமரு தடியின் வீழப் பொருதியே புறங் கொடாது
விடைமழு வுடையான் பாத மென்கம லத்திற் சேர்க்க
படைமரு தன்கைக் குந்தம் போலினிப் பாரி லுண்டோ.

(இ - ள்.) திருவிடைமருதூரி லரசாட்சி செய்துகொண் டிருந்த படைமருத னென்னுஞ் செங்குந்தத் தலைவன் கையில் வில்லும் பாணமு மேந்தி யுத்தசன்னகமாக வந்த சிறக்கையா னென்னும் பகைவனை அவன் புறங்கொடுத்தோடாது பருத்த மருத விருக்கத்தினடியில் வீழும்படி யுத்தஞ்செய்து, இடப வாகனமு மழுவாயுதமு முடையானாகிய பரமசிவனது மிருது வான தாமரை மலர்போன்ற திருவடியிற் சேர்த்தா னாதலால் அவன் கையின்கணுள்ள குந்தம்போ லிக்காலத்து இவ்வுலகத் தில்லை. எ-று. 36

"புடைமரு தடியின்வீழப்பொருதி" என்பதற்கு, "புடைமருதூரென்னுந் திருப்பதியில் மருதவிருக்கத்தினடி யில் வீழும்படி பொருதி" என்றுரைசெய்வாரு முளர்.

செங்குந்தத் தலைவர்கள் வங்கதேசத் தரசனை வென்றமை
கூறியது.

கூளிபாறி னமிடங் கொண்டு சுற்றவே
காளிசா தகரெலாங் களத்தி லாடவே
வாளிதொட் டெழுமொரு வங்கக் கோவைமுன்
றோளிணை யாற்பொருந் துங்கைக் குந்தமே.

(இ - ள்.) கழுகுகளும் பருந்துகளும் இடமும் வலமுமாக வட்டமிட்டுச் சுற்றிவரவும் காளியும் அவளது பரிவாரங்களும் யுத்தகளத்தில் நடனஞ்செய்யவும் பாணப்பிரயோகங்களைச் செய்தோங்கிய வொரு வங்கதேசத்தரசனை, ஆதியிற்றம திரண்டு தோள்களினாலும் பொருதிச் செயங்கொண்டது இப் பெருமை பொருந்திய செங்குந்தம். எ-று. கள

செங்குந்தத் தலைவர்க்கு யாண்டு மெதிரின்மை கூறியது.

வானைவென் றுவரி சூழ்ந்த மண்ணைவென் றவுண ரான
கானைவென் றம்பு ராசிக் கடலைவென் றருங்க லிங்கன்
சேனைவென் றலங்கன் மார்பஞ் செறியுமா மடங்கல் வையக்
கோனைவென் றரிய வாகை கொண்டெனத் திரியுங் குந்தம்.

(இ - ள்.) இச்செங்குந்தமானது வானுலகத்திலுள்ள பகைவரை வென்று, கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்திலுள்ள அஞ்சலரை வென்று, அவுணர்களென்று சொல்லா நின்ற காட்டை வென்று, அம்புராசியென்னுங் கடலைவென்று சயித்தற்கரிய கலிங்கதேசத் தரசனோடு அவனது நால்வகைச் சேனையை வென்று, மார்பினிடத்து வெற்றிமாலை பொருந்திய பெரிய சிங்கத்தை யொத்த வையக்கோனென்னு மரசனை வென்று, கிடைத்தற்கரிய யவ்வெற்றிமாலையை மேற்கொண்டதென்று யாவருஞ்சொல்ல உலகமெங்குஞ் சஞ்சரிக்கும்.

கொண்டதென வென்பது கொண்டெனத் திரிந்து நின்றது.

செங்குந்தத் தலைவர்கள் ஒட்டக்கூத்தன் கவியையே
சிறந்ததாகக் கொண்டாரென்பதூஉம்
ஐம்பத்தாறு தேசங்களையும்வென்று
திறைகொண்டா ரென்பதுஉங் கூறியது.

செங்கோ னடத்தும் வளவனிட்ட சிங்கா தனத்தி லினிதிருந்த
நங்கோன் கவியே கவியென்று நாட்டிக் கவிபுன் களைகளைந்து

வங்கோ டீழங் கன்னுட மாராட்டி ரங்குச் சரஞ்சீனங் [ந்தம்
கொங்கோ டெங்குந் தரத்திறைமேய கொள்ளுமின்னுர் செங்கு

(இ - ள்.) இவர்கள் கையிற் ருங்கிய செங்குந்தமானது மநுநீதிவழாது செங்கோல் நடத்திய சோழராசனுலிடப்பட்ட சிங்காதனத்தி லினியவாக விற்றிருந்த நமது கவிராசனுகிய அம்பலக் கூத்தனுற் சொல்லப்பட்ட பிரபந்தமே பிரபந்தமென்று உலகில் நிலைபெறவைத்து மற்றைப் புன்கவிகளாகிய களைகளை நீக்கி, வங்கம் ஈழம் கன்னடம் மாராட்டிரம் குச்சரம் சீனம் கொங்க முதலிய ஐம்பத்தாறு தேசங்களுந் திறைகொடுக்கப்பெற்று அரசாட்சிசெய்தது. எ-று. 39

செங்குந்தர் மரபுக்கும் சோழன் மரபுக்கும்
புலிக்கொடி யுண்டென்று கூறியது.

கலிக்குறும் படுவள வனுக்குங் காதுசூர்
வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
புலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக்கொடி மரபிரண் டினுக்கும் போந்ததால்.

(இ - ள்) இவ்வுலகத்தில் தாரித்திரமென்னும் பொல்லாங்கு நிலைபெருது அழிக்கின்ற சோழனுக்கும் போர் செய்கின்ற சூரபதுமனது வல்லமை நிலைபெருது அழித்த செங்குந்தர்க்கும் கிடைத்திருக்கின்ற நல்ல புகழெல்லாம், இருவருங் குறும்படுதலினல் சமமாக விருத்தலின் புலிக்கொடியும் இவ்விருமரபி னுள்ளார்க்குங் கிடைத்ததாம். எ-று. 40

செங்குந்தத்தலைவர் சோழராஜன் பகைவரை வெல்லுதற்
குரிமை கூறியது.

தென்னனைச் சேரனை சிறுமை சொல்லவு
மன்னனை வளவனை மகிழ்ந்து பாடவும்
பன்னருஞ் சாதி படைத்த பான்மைபோ
லொன்னலர்க் குள்ளினத் துற்ற குந்தமே.

(இ-ள்.) பாண்டியனையுஞ் சேரனையும் பழித்து அவர்களைச் சிறுமையாகச் சொல்லவும் இராசாதி ராசனென்னுஞ் சோழனாகிய தன்னை மகிழ்ச்சியோடு புகழ்ந்து பாடவும் சொல்லுதற்கரிய சீர்த்தியினை யுடைய ஒட்டக்கூத்த னென்னும் புலவனாகிய என்னைத் தன்னினத்திற் படைத்த தன்மைபோல, பகைவர்களை செயம் பண்ணுதற்குத் தன்னினத்துள்ளே பொருந்திய செங்குந்தர்களைப் படைத்தான். எ-று. 41

வேலுக்குங் குந்தத்திற்கும் வேற்றுமையின்மை கூறியது.

சேல்வேறு புலிவே றாகுஞ் சேதுவி னளவாய்ச் சென்னி
கோல்வேறில் லாம லோச்சிக் கன்னியே கொள்வ னென்றே
மால்வேறு சிவன்வே றென்ன வழுத்திடா வண்மை போல
வேல்வேறு குந்தம்வே றென் றிருபொருள் விளம்பார் மேலோர்

(இ-ள்.) மீனக்கொடியும் புலிக்கொடியுங் கொண்டு பாண்டியனுஞ் சோழனும் அரசாண்ட இமயமுதல் சேதுவினளவும் செங்கோல் வேறொன் றுண்டென்று சொல்லாமல் மூசுகுந்தச் சக்கிரவர்த்தி தான் தனியே செலுத்திக் கன்னியாகுமரியளவும் கைக்கொண்டானென்று. அறிந்த பெரியோர் திருமால்வேறு சிவன் வேறென்று கருதிப் பிரித்துத் துதியாத தன்மைபோல முருகக்கடவுள் கையிற்றாங்கிய வேலாயுதம் வேறென்றும் நவவீரர்கள் கையிற்றாங்கிய குந்தம் வேறென்றும் இரண்டு பொருள்படச் சொல்லமாட்டார். எ-று. 42

செங்குந்தத்தின் பெருமை கூறியது.

பூமாலை கடப்பந் தாமம் பூண்மணித் தெரியல் செய்ய
பாமாலை தன்னைக் கைக்கொள் முதலியர் பங்க தாக்கி
மாமாலை யொல்லார் காவில் வழிதுழிக் குடரின் மாலை
தேமாலை யாகச் சூடுஞ் செங்குந்தம் போலு முண்டோ.

(இ-ள்.) வெற்றிமாலை கடப்பமாலை சந்திராரங்கள் இரத்தினாரங்கள் புலவராலியற்றிய குற்றநீங்கிச் செவ்வித்

கிய பாமாலைகள் இவைகளை யெல்லாம் தன்னைக் கையிற்கொண்ட முதலியார்கள் பட்சமாக்கி, மிகுந்த மயக்கத்தையுடைய சத்துருக்களினது சந்ததியின் வழிவழியாக வருபவரது குடர் மாலைகளை தேன் பொருந்திய மலர் மாலையாகத் தான் தரித்துக்கொள்ளா நின்ற செவ்விய குந்தம்போலு முலகத்தி லுண்டோ, எ-று. 43

இதுவுமது.

பற்றினும் பற்றுஞ் சென்னி பறிக்கினும் பறிக்கும் பாச
மெற்றினு மெற்றுங் கூற்றை யீரினு மீரும் வாரிச்
சுற்றினுஞ் சுற்று மண்டங் துகளெழச் செயினுஞ் செய்யும்
மற்றினுங் குந்தம் போற்ரு திருப்பவ ருளரோ மண்மேல்.

(இ - ள்.) நவவீரர்கள் கையின் கண்ணுள்ள குந்தமானது யமதருமனை அவன் வலியை யொடுக்கிப் பிடிக்கவேண்டுமானாலும் பிடிக்கும், அவன் றலையைப் பறிக்கவேண்டுமானாலு பறிக்கும், அவன் பாசத்தைப் பிடுங்கி யெறியவேண்டு மானாலு மெறியும், அவனைப் பிளக்கவேண்டு மானாலும் பிளக்கும், அவனை யெடுத்துக் கரகரவென்று சுழற்றவேண்டு மானாலும் சுழற்றும், இதுவுமன்றி அண்டங்களைத் துகளெழச் செய்ய வேண்டு மாயினுஞ் செய்யும். இக்குந்த மித்தன்மையதென் றறிந்தும் இவ்வுலகத்தி லிதனைப் போற்ரு திருப்பவரு முண்டாயிருப்பரோ. எ-று. 44

இதுவுமது.

போற்றியோ போற்றி யென்று புதுமலர் தூவிச் சீற்ற
மாற்றியே வந்தி யாம லிடையலர் வாழ்ந்தி ருந்தால்
காற்றென வூழித் தீயிற் கடலெனக் கொடிய கோபக்
கூற்றெனத் திரிந்து சோரிக் குளித்துடன் களிக்குங் குந்தம்.

(இ - ள்.) சத்துருக்கள் தமதுக்கிரகோபங்களை மாற்றிப் புதிய மலர்களா லருச்சித்துப் போற்றியோ போற்றியென்று வணங்காதவர்களா யுயிரோடு வாழ்ந்து அரசாட்சி செலுத்து

வாராயின், உகாந்தகால மாருதத்தைப் போலவும் கோபங் கொண்டு எங்குளரென் றுலகமெங்குஞ் சக்கராகாரமாகத் திரிந்து அச்சத்துருக்களைக் குத்தி யவருடலினின்றும் பெருகாநின்ற இரத்த வெள்ளத்தில் மூழ்கிப் பின்பு சந்தோடிக்கும். எ-று. 45

பழுவூர் வீரனென்னுஞ் செங்குந்தத்தலைவன் புகழ்கூறியது.

சூட்டும் வீர வாகுவெனச் சொல்லும் பழுவூர் வீரனமர்
மூட்டுங் கால மூழிவெள்ள மூடுங் கால மாகாதோ
வேட்டங் காலில் வீழாதார் மேலு முளரோ வீதியுலா
மீட்டுங் காலங் குந்தங்கண் டெழுமே கழுகு பருந்துகளும்

(இ-ள்.) முடி சூட்டப்படுகின்ற வீரவாகு தேவருக் கொப்பானவனென்று சொல்லாநின்ற பழுவூரில் வாழும் வீர னென்னுஞ் செங்குந்தத் தலைவன் யுத்தமாகிய நெருப்பை மூளுவிக்குங் காலத்து, ஊழிகாலத்து வெள்ளத்தினால் மூடப் படுகின்ற சர்வ சம்மார காலமாக மாட்டாதோ, அன்றியும். அவனதழகிய காலில் விரும்பிவந்து வணங்காதார் பின்னு முயிரோடு வாழ்வரோ. வீதியிற் பவனிவருங் காலத்தும் அவன் கையிற்றுங்கிய குந்தத்தைக் கண்டு கழுகுகளும் பருந் துகளும் ஆகாயத்திலெழுந்து வட்டமிடும். எ-று. 46

பழுவை நாராயணனென்னுஞ் செங்குந்தத்தலைவன்
புகழ்கூறியது.

காரா முருவ மொழிந்துபொன்னின்
கவினார் பழுவை வளம்பதியில்
நாரா யணனே விக்கிரம
நாரா யணனு மென்னுதார்
வாரா வழிவந் தோமென்றே
வாயிற் புல்லைக் கவ்விவந்தச்
சேரார் சேரா நின்றுதொழச்
செய்யு மன்னன் செங்குந்தம்.

(இ - ள்.) சூற்கொண்ட மேகம்போலு முருவத்தை விட்டுப் பொன்போன்ற அழகிய வுருவத்தைக்கொண்டு வளமை பொருந்திய பழுவையென்னு நகரத்தில் வாழாநின்ற நாராயணனென்னுஞ் செங்குந்தத் தலைவனே திருவிக்கிரம வவதாரஞ் செய்த அந்த நாராயணனு மென்று கருதாதவராகிய வந்தச் சத்துருக்கள் போர்க்கு வரத்தகாத விடத்து வந்தோமென்று வாயிற் புல்லைக் கவ்விக்கொண்டு எதிராக வந்து தளர்ந்து தொழும்படி அவன் கையிற்றுலங்கிய சிவந்த குந்தமானது செய்யும். எ-று.

47

கச்சித்தனிய னென்னுஞ் செங்குந்தத்தலைவன் புகழ்கூறியது.

இனிமா நிலத்திற் கண்டதில்லை
கேட்டே யிருத்த லன்றிபெரும்
பனிமால் வரையு மைநாக
முன்பின் படைதா னெடுத்தாலு
முனிமா றுண்டோ நடுநின்று
முடிப்பான் கச்சித் தனியன்வட்டத்
தனிமா நிழற்கீழ்ச் செங்குந்தஞ்
சரணு கதிக்கு வைகுந்தம்.

(இ - ள்.) யாதொரு நியாயங்களையு நடுவுநிலைமையாக நின்று முடிவு செய்யும் பொருட்டுக் காஞ்சிபுரத்தில் ஒப்பற்ற மாமரத்தினது வட்டமான நீழலின்கண் ணிருந்து நடத்தா நின்ற தெய்வ சிம்மாசன கர்த்தராகிய செங்குந்தத் தலைவர் ஆயிரத்துத் தொள்ளாயிரவரில் ஒருவனாகிய தனியனென்பவன் சத்துருக்க ளெல்லாங் கண்டவுடன் சரணாகதி யடையும்படி செய்வித்தற்குக் காரணமாகத் தன்கையில் கூரிய குந்த மிருத்தலினால், குளிர்ச்சியைத் தராநின்ற பெரிய பர்வதராசனும் மைநாகமும் முன்னும் பின்னுமாகப் படையெடுத்து வந்தாலுங் கோபிப்பதுண்டோ. ஆதலால், இச்செங்குந்தனது

புகழைக் கேட்டிருத்தலேயன்றி இப்பொழு திவ்வுலகத்தில் வேறொருவரிடத்து கண்டதில்லை. எ-று. 48

செங்குந்தத் தலைவனாகிய வொற்றியூரனது புகழ்க் கூறியது.

உடல மண்மே லுயிர்விண்மே
    லொல்லா ரொடுங்க வுதிரமொடு
குடருங் கொழுவுங் கழுகோடுங்
    கொள்ளை கொள்ளப் பரிந்தூட்டு
மடல்வெண் டாழை முகமலர
    வாரி வாரித் திரைக்கரத்தால்
கடல்வெண் டரள மேயெறியு
    மொற்றி யூரன் கைக்குந்தம்,

(இ-ள்.) மடலையுடைய தாழையினது வெண்மலரின் முகமானது மலரும்படி கடலானது அலைகளாகிய கைகளினால் வெள்ளிய முத்தங்களையே வாரிவாரி வீசாநின்ற வளப்பம் பொருந்திய வொற்றியூரனது கையின்கணுள்ள குந்தமானது, சத்துருக்கள் தங்களுடலத்தை மண்ணின் மீதும் உயிரை விண்ணின்மீதும் விட்டுத் தாமின்றாகிப்போக அவர்களுதிரத்தையும் குடரையும் கொழுப்பையும் கழுகும் பருந்தும் காக்கையும் கொள்ளையாகக் கொண்டுண்ண ஆசையோடு முண்பிக்கும். எ-று. 49

செங்குந்தத் தலைவனாகிய களத்தூரரசன் புகழ் கூறியது.

தளர்ந்த வர்க்குத் திருவுருவந்
    தன்னை யடையார்க் கொருசிங்க
மிளந்தை யவர்க்குச் சிலைவேணல்
    லிசையாம் பொற்பூ தரமேயாம்
வளர்ந்த சாலி வரம்பினில்வால்
    வளைகண் முத்தந் தரும்வளங்கூர்

களந்தை யாதி நகரரசன்
கைக்குந் தம்போற் காணேமே.

(இ - ள்.) தளர்ந்துவந்து தன்னை யடைந்தவர்களுக்கு முகமலர்ச்சியை யுடைய அழகிய உருவத்தை யுடையவன் தன்னைவந்து வணங்காத சத்துருக்களுக்கு ஒப்பற்ற சிங்கம் போன்றவன் இளமைப் பருவத்தையுடைய பெண்களுக்குக் கருப்பு வில்லையுடைய மன்மதனை யொப்பான். அழகிய நிறைந்த புகழ்க்குப் பொன்மலையை யொப்பானாகிய நெற் பயிர் வளர்ந்த வயலினது வரம்பில் வெள்ளிய சங்கினங்கள் முத்தத்தை யீனாநின்ற வளப்பமிகுந்த களந்தை முதலிய நகரத்திற்கு அரசனது கையின்கண்ணுள்ள குந்தத்தினது புக
ழைப்போல ஒருவரிடத்துங் கண்டேமில்லை. எ-று. 50

புற்றிடங் கொண்டானென்னுஞ் செங்குந்தத்தலைவன்
புகழ்கூறியது.

கற்றிடங் கொண்டவர் கவின்சொற் கொள்ளுமே
யுற்றிடங் கொண்டபேர்க் குலகை நல்குமே
வெற்றிடங் கொண்டமே வலரை வீட்டுமே
புற்றிடங் கொண்டவன் பொலிகைக் குந்தமே.

(இ - ள்.) புற்றிடங் கொண்டானென்னுஞ் செங்குந்தத் தலைவனது கையிற்றாங்கிய பொலிவுபெற்ற செங்குந்தமானது பல நூல்களையுங் கற்று விசாலமான கல்வி யுணர்ச்சியை யுடைய புலவர்களாற் சொல்லிய அழகுபெற்ற பிரபந்தங்களைச் சூட்டிக்கொள்ளும். தாமிருக்கு மிடத்தில் வரம்பெற்றுத் தன்னைச் சரணாகதியா யடைந்த மித்துருக்களுக்கு இவ்வுலகத்தைத் தரும். தன்னோடு மாறுபட்டுப் போர்க்களத்து யுத்தசன்னாகமாய்வந்த சத்துருக்களை நாசம்பண்ணும். எ-று.

கோளாந்தகனென்னுஞ் செங்குந்தத்தலைவன் புகழ்கூறியது.

மூளா வடவைச் சிகரகிரி
முடிகம் பிக்கு மாறுதஞ்செங்

தாளான் மடங்க வொருகூற்றந்
தனிமூம் மதில்காய்ச் சிறுமூரல்
வேளா ருயிரைப் போக்கவனற்
கண்ணும் விளங்கு முருத்திரனோர்
கோளாந் தகனெண் டோளாண்கைக்
குந்தம் வாகைக் குந்தமே.

(இ - ள்.) சதாகாலமு மூண்டுகொண் டிராநின்ற வடவாமுகாக்கினியும் * அட்டகுலபர்வதங்களும் தலைகள் நடுங்கும்படி ஒப்பற்ற யமன் மடங்க உதைத்த தனது சிவந்த பாதமும் ஒப்பில்லாத மூன்று மதில்களையுடைய ‡ திரிபுரத்தையெரித்த புன்முறுவலும் மன்மதனுயிரை நீக்கிய அக்கினிக் கண்ணும் விளங்காநின்ற உருத்திரனுக் கொப்பாகிய வயிரம் போன்ற தோள்களையுடைய கோளாந்தக னென்னுஞ் செங்குந்தத்தலைவன் கையிலிராநின்ற குந்தமே, வெற்றி பொருந்திய குந்தமாகும். எ-று. 52

புலியூர் பள்ளிகோண்டானேன்னுஞ் சேங்குந்தத்தலைவன் புகழ்கூறியது.

புண்டரீகமே குவளையே தளவமே பூமாவே
பிண்டியே பெறுஞ்சித்த சன்றன்குணம் பிழையாவென்

---

* அட்டகுலபர்வதங்களாவன:— 1. இமயம், 2. எமகூடம், 3. கந்தமாதனம், 4. கைலை, 5. நிடதம், 6. நீலகிரி, 7. மந்தாரம், 8. விந்தம் என்பன.

‡ திரிபுரமுதலிய அட்டவீராட்டனம்:— 1. திருகண்டியூர்-பிரமன் தலைகொய்தது, 2. திருக்கோவலூர் - அந்தகனை யழித்தது, 3. திருவதிகை திருவீராட்டனம் - திரிபுரமெரித்தது, 4. திருப்பறியலூர் - தக்கன் தலைகடிந்தது. 5. திருவிற்குடி - சலந்தரவதம் செய்தது. 6. திருவழுவூர் - கயாசுர சம்மாரஞ் செய்தது, 7. திருக்குறுக்கை - காமதகனம் செய்தது, 8. திருக்கடவூர் - காலனையுதைத்தது என்பன.

கண்டவீர கண்டன் புலியூர்த்தனி காத்தேசிர் [தம்.
கொண்டபள்ளி கொண்டான் கரதலத்திடைக் கொளுங்குந்

(இ - ள்.) சத்துருக்களைப் புறங்கொண்ட வீரகண்டாமணியை யுடையோனாகிய சிதம்பரமென்னு நகரத்தைத் தான் தனியரசாட்சிசெய்து காத்துப் பல சிறப்புகளையு மேற்கொண்ட பள்ளிகொண்டா னென்னுஞ் செங்குந்தத்தலைவன் கையிற் கொள்ளுங் குந்தமானது, *மன்மதன் கையிற் கொள்ளாநின்ற தாமரையும் நீலோற்பலமும் முல்லையும் மாம்பூவும் அசோகுமாகிய ஐந்து பாணங்களும் பெற்றிருக்கின்ற நினைப்பூட்டன் முதல் கொல்லல் வீறாகச்சொல்லிய ஐந்து குணங்கள் போலவே சத்துருக்களுக்குப் போர் நினைப்பூட்டல் தோட்டின வுறுத்தல் துன்புறுவித்தல் மூர்ச்சை யுறுவித்தல் கொல்லல் ஆகிய விவ்வைந்து குணங்களையுஞ் செய்வித்தலி னின்றுந் தப்பிப்போதலில்லை. எ-று. 53

பிணவனென்னுஞ் செங்குந்தத் தலைவனது புகழ்கூறியது.

குணமார் தருமத் தெவ்வேந்தர்
குலக்கோ ளரியே குலத்தருவே
தணவா வண்மைச் சகம்பேசச்
சகமே தாங்கும் பூதரமே
பிணவா வென்று பகரார்வாய்
பிளந்து சோரிப் பெரும்பூதக்
கணம்வாய் நிரப்புங் குந்தன்போற்
காணேங் கேளோங் கற்றேமே.

(இ - ள்.) சக்கரவியூக முதலிய யூகங்களைச் சதுர்விதச் சேனைகளால் வகுத்துச் சாமர்த்தியரா யுத்தஞ் செய்யத்தக்க

* மன்மதன் கணை ஐந்தின் செயல்:—
"நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ வனைத்துணவு நீக்கு மசோகு வனத்திலுறு முல்லைக் கிடைகாட்டு மாதே முழுநீலங் கொல்லுமத னம்பின் குணம்."

குணங்கள் பொருந்திய அந்தச் சத்துருக்களாகிய இராச யானைகளுக்குச் சிங்கமே! கொடுத்தலில் அரிச்சந்தன முதலிய பஞ்சதாருவுக் கொப்பானவனே! எக்காலு நீங்காத வளப்பத்தை யுலகத்திலுள்ளார் புகழ இவ்வுலகத்தைத் தாங்காநின்ற குணக்குன்றே! பிணவனென்னு மரசனே! என்று சொல்லித் துதியாதவர் வாயைப் பிளந்து அவைகளினின்றும் பெருகி யோடாநின்ற இரத்தத்தைப் பெரிய பூதகணங்களின் வாயி னிரப்பாநின்ற செங்குந்தத் தலைவனைப்போல விவ்வுலகத்தில் புலவர்களே நாங் கண்ணாற் கண்டோமில்லை. காதாற் கேட்டோமில்லை. எ-று.

கண்டியூர னென்னும் செங்குந்தத் தலைவன் புகழ் கூறியது.

மிண்டி டாமன் மேவலீர் விளம்பி டாம லோருமின்
றொண்டி டாமல் வாழ்வதெங்ஙன் சூர பன்மன் பட்டிடக்
கண்ட வீர வாகுதேவர் கால் வருங்கு லத்துமன்
வண்டு லாவு கண்டியூரன் வயிர வாகு குந்தமே.

(இ - ள்.) சத்துருக்களே! சூரபதுமன் முதலிய அவுணர்களெல்லா நாசமடைய யுத்தஞ்செய்த வீரவாகுதேவரது சந்ததியின் வழியாகவந்த குலத்திற்சிறந்த அரசனாகிய வண்டுகளுலாவி கீதங்களைப் பாடாநின்ற கடப்பமாலையை யுடைய கண்டியூர னென்னுஞ் செங்குந்தத் தலைவன் கையின்கணுள்ள வச்சிராயுதத்தை யொத்த அழகிய குந்தத்தோடு எதிர்க்காமலும் வீணான வம்பு வார்த்தைகள் பேசாமலும் ஆராய்ந்தறியுங்கோள், அச் செங்குந்தத் தலைவனுக்கு நீவிரடிமைத்தொழில் செய்யாமல் வாழ்ந்திருப்ப தெங்ஙனம் ஆகையால் வணங்கிப் பிழையுங்கள். எ-று. 51

வீரவாகுதேவர் கால்வருங்குலத்து மன், எனவே வீரவாகுதேவருக்குச் சித்திரவல்லி யென்னுமொரு குமாரியும் அனகன் சனகனென்னு மிரண்டு குமாரரு முண்டென்றும்,

அம்மூவரில் பிள்ளைகளின் வழியாக வந்தவர் இச்செங்குந்தத் தலைவரென்றுங் கூறியவாறாயிற்று.

### முதுகுன்ற மணியனென்னுஞ் செங்குந்தத்தலைவன் புகழ் கூறியது.

மூத்த முதுகுன் றக்குரிசின்
  முதிரு மணவைப் பாராளன்
பாத்த னென்னு மணியன்கைக்
  குந்தங் கொடுத்துப் பகரவே
பூத்த மார்பத் தார்பறித்துப்
  பூழி படவே வீழ்ந்திறைஞ்சிக்
கோத்துச் செங்கை மலர்கூப்பிக்
  குறுகார் சிறுகி வரக்கண்டான்.

(இ - ள்.) முதுகுன்றத்தில் வாழ்ந்து அரசாட்சி செய்துக்கொண்டிருந்த பெரிய வரசனும் மணவையென்னு நகரத்திலிருந்து அரசாண்டுக் கொண்டிருந்த பெரியவரசனுமாகிய இவ்விருவருஞ் சத்துருக்களால் மிகுந்த துன்பம் அடைந்து முதுமையால் வலியில்லாதவர்களாய் அருச்சுணனுக்குச் சமானமான வலியை யுடையவனென்று சொல்லாநின்ற மணியனென்னும் பிள்ளைகையில் தங்கள் கைக்குந்தத்தைக் கொடுத்துப் பட்டங்கட்டிச் சத்துருக்களை அதம்பண்ணென்று சொன்னமாத்திரத்தில், முன்னெதிர்த்து யுத்தஞ்செய்த சத்துருக்களெல்லாந் தங்கள் பரந்தமார்பிற் றரித்திருந்த வெற்றி மாலைகளைக் கழற்றி யெறிந்து புழுதி யுடலிற் படும்படியாக மண்ணில் வீழ்ந்து வணங்கித் தாமரைமலர்போன்ற தமது இரண்டு கைகளையுங் கோத்துக் குவித்து அடங்கிவரத் தனது வீரத்தைச் செலுத்தினான். எ-று. 56

### தஞ்சை வேம்பனென்னுஞ் செங்குந்தத்தலைவன்புகழ்கூறியது.

பஞ்சம் வெம்பத் தரும்பனையே நாவான் மிகவே பாடாது
தஞ்சை வேம்ப னைப்புகழ்ந்தே மதுமுன் செய்த தவமேயா

மெஞ்ச வெளிதோ ஆழியுருத் திரன்கைக் கொளுமூவிலைவேலே
வஞ்ச மாயை யவதரித்த திவன்கைக் குந்த வரவாமால்.

(இ - ள். எம்போலிகளது வறுமை வெம்பி நீங்கக் கொடுக்கின்ற பணிமாலையை யுடைய சேரனேயே யெமதுநாவா லதிகமாகப் பாடாது தஞ்சையில் வாழ்ந்திருக்கின்ற வேம்ப னென்னுஞ் செங்குந்தத் தலைவனைப் புகழ்ந்தோம், அஃதியா முன்செய்த தவத்தன்மையேயாம். அத்தவத்தைக் குறைப் படச்சொல்ல வெளிதோ? இவன் கையிலிருக்கின்ற வஞ்சமே யுருவமாகிய மாயையே யவதாரஞ் செய்துவந்த குந்தத்தினது வரவானது, உகாந்தகாலத்து விளங்காநின்ற உருத்திரமூர்த்தி கையிற் கொள்ளாநின்ற மூன்றிலையைப்போலும் வடிவினை யுடையசூலாயுதமேயாம். எ-று. 57

சேங்குந்தத்தலைவர் வல்லானேன்னு
மரசனைச் செயித்தமை கூறியது.

வல்லான்றன் றிருத்தேவி மங்கிலியம் பிழையாமன்
மடிதா னேற்றிங்
கெல்லோரு மங்கிலியப் பிட்சையிடு மெனத்தாள்வீழ்ந்
திரப்ப வேண்டிக்
கொல்லாமல் விடுதல்புக ழெனக்கருதி யோசுற்பின்
கொண்ட வாய்மை
நல்லார்க ளிருந்தவையின் புகழ்கைக்கோ காத்ததுகொ
னஞ்செங் குந்தம்.

(இ - ள்.) சோழராசனோடு மாறுபட்டு. வீரன் நாராய ணன் முதலிய செங்குந்தத்தலைவர்கள் பன்னிருவராற் றோல்வி யடைந்து அவர்கள் கையிலகப்பட்டுத் தன் பிராணனைக் கொடுக்க விருந்த வல்லானென்னு மரசனது அழகிய மனைவி யாகிய அனங்கவல்லி யென்பவ ளச்சமயத்தில் முந்தானை யேற்று நான் அமங்கலியாகாமல் நீவிரெல்லோரு மங்கிலியப்

பிட்சை கொடுக்கவேண்டு மென்று அவர்கள் பாதத்தில் வீழ்ந்து தோத்திரஞ்செய்து யாசிக்க, நமது செங்குந்தத்தலைவர்கள் அவ்வல்லானுக் குயிர் கொடுத்து இரட்சித்தது அவனைக் கொல்லாமல் விடுதல் புகழெனக் கருதியோ அல்லது கற்பினது உண்மையையே மேற்கொண்ட மாதர்களிருந்த சபையின்கண் தம்மைத் துதிப்பதற்கோ வறியேன். எ-று. 58

செங்குந்தத்தலைவ ரிரப்பவருக் கெக்காலத்துங்
கொடுப்பரேன்பதை விளக்கியது.

எல்லாக் காலத்தினுமொன் றேற்பவருக் கில்லையெனுஞ்
சொல்லா னதுகற்றுஞ் சொல்லறியா ரேந்துகுந்தம்
வல்லானைக் கொல்லாமன் மனைவிக்கு மங்கலிய
முல்லாசத் துடனளிக்கு முதவியதொன் றறிந்தேமால்.

(இ - ள்.) இச் செங்குந்தத் தலைவர் கொடை கொடுக்கத்தக்க காலத்துந் தம்மிடத் தோர்பொருளை யாசிப்பவருக்கு மகிழ்ந்து கொடுத்தலேயன்றி இல்லையென்னுஞ் சொல்லைக் கற்றுஞ் சொல்லவறியாத நாவினையுடையாரென்ப தெதனால் அறிந்தோமெனில், அவர் கையின்கட்டாங்கிய குந்தமானது வல்லானென்னுங் கொடிய துட்டன் பிடிபட்டபோது அவன் மனைவியாகிய அனங்கவல்லி யென்பவளிரந்து மாங்கலியப் பிட்சை கேட்க விரக்கமுற்று அவனைக் கொல்லாமல் மகிழ்ச்சியோடு முயிர்ப்பிட்சை கொடுத்தமோ ருதவியினாலே தெரிந்துகொண்டோம். எ-று. 59

செங்குந்தத்தலைவரது வீரத்திறங் கூறியது.

முத்தமி ழிராசரா சேந்திரன் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெ றூதென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே.

(இ - ள்.) சௌரியத்தையுடைய வீரன் நாராயணனென்னுஞ் செங்குந்தத் தலைவர்கள் இய லிசை நாடகமென்னு முத்தமிழிலும் வல்ல இராசராசேந்திரனாகிய பராந்தகச் சோழன் முன்பு தங்கள் சுத்த வீரத்தின் வல்லமை எங்கும் விளங்குதற்கு வல்லான் றலைபோல ஒரு பொய்யான தலையைக் கொடுத்தலினாலே புகழ்பெறுத லில்லையெனக் கருதி தங்களிருவருடைய மெய்த்தலைகளையுங் கொடுத்தனர். எ-று. 60

மெய்த்தலை கொடுத்தனவெனவே வல்லானைச் செயிக்கப் பன்னிருவர் சென்றாரென்பதூஉம், இப்பன்னிருவரி லொருவரிறந்து படுவாரெனில் மற்றையரு மிறக்கக் கடவேமென்னும் பிரதிக்கினை செய்துகொண்டாரென்பதூஉம், அப்பிரதிக்கினையானின்ற விருவருந் தந்தலைகளை யரசன்முன்ன ரரிந்து வைத்தன ரென்பதூஉம்; பின்னர் தங்கள் குலமுதல்வனாகிய முருகப்பெருமானுடைய சடக்கர மந்திர தியான பலத்தால முன்ன ரிறந்துள்ள பதின்மரோடு தாமிருவரும் உயிர்பெற்றெழுந்தார்க ளென்பதூஉம் பெற்றாம்.

இக்காதையின் விரிவை வல்லான் புராணத்திற் காண்க.

இதுவுமது.

பைந்தமிழ்க் காவலர் பகரும் பாடலார்
கந்தவே டான்மகிழ் கைலைக் காவலார்
வந்த வீரப்படைத் தலைவர் வந்துழி
சிந்தவே கழுத்துடற் செருத்த குந்தமே.

(இ - ள்.) செந்தமிழ்ப் புலவராற்செய்த பாடலைப்பொருந்திய முருகக்கடவுள் மகிழ்ந் தெழுந்தருளியிருக்குங் கைலாயமலைக்குக் காவலராகிய நவவீரர்கள் சந்ததியில் வந்த வீரம்பொருந்திய செங்குந்தத் தலைவர்கள், சமயம் வந்தபோது தம துயிரையும் ஒரு பொருளாயெண்ணாமல் கைக்குந்தத்தால் தம்முடலினின்றுங் கழுத்துச் சிந்தும்படி அறிந்தவராவர், எ-று. 61

குந்தத்தின் பெருமை கூறியது.

* தில்லைமூ தூர்நடஞ் செய்யு மாலயத்
தொல்லையிற் பொறித்திடு முழுவை முத்திரை
யெல்லையி னுவலொன் பதின்மர்க் காக்கியோர்
வல்லயிற் றுணையொடு மருவுங் குந்தமே.

(இ - ள்.) சபாபதி நடனஞ்செய்யாநின்ற ஆலயத்தை யுடைய சிதம்பரமென்னும் பெரிய நகரத்தில் யழமைபாக வரசாட்சி செய்துவந்த நவவீரர்களது கொடியிற்றீட்டிய புலியாகிய முத்திரையானது அளவுபடாத விரிவையுடைய நாவலந்தீவு முழுமையுஞ் செல்லும்படி செய்வித்தது, ஒப் பற்ற வல்லமையை யுடைய வேலாயுதத்தைத் துணையாகக் கொண்டிருக்குஞ் செங்குந்தம். 62

செங்குந்தத்தலைவர் கூத்தனென்னுந் தம்மாற் பரணிப் பிரபந்தங் கேட்டனரென்பதை விளக்கியது.

எந்தையா மம்மைபாகத் திறைவனை வணங்கியானே
பைந்தமிழ்ப் பரணிசெய்தப் பாடலோ டந்தமாக
வந்தமா மடவாராட வரியணை யிருந்தவீரர்
குந்தமே குந்தம்வேலூ குந்தமு முளதோகூற

(இ - ள்.) உமாதேவியை யொரு பக்கத்திலே யுடைய என்றந்தையாகிய கடவுளை வணங்கி யானே பசிய தமிழாற் கூறிய பரணி யென்னும் பிரபந்தத்தின் பாடலை அபினய விலக்கணத்தோடு அழகிய மாதர்கள் நர்த்தனஞ்செய்ய சிங்கா

* சபாபதி நடனசாலை — 5.

திருவாலங்காடு - இரத்தினசபை
சிதம்பரம் - கனகசபை பொன்னம்பலம்.
மதுரை - வெள்ளிசபை, வெள்ளியம்பலம்.
திருநெல்வேலி - தாம்பிரசபை.
குற்றாலம் - சித்திரசபை.

தனத்தி லெழுந்தருளியிருந்து கேட்டு மகிழ்ந்த செங்குந்தத் தலைவர்கள் கையின்கட்டாங்கிய குந்தமே குந்தம், உலகத்தார் துதிக்க வேறு குந்த முண்டாயிருக்கின்றதோ. எ-று. 63

செங்குந்தத்தலைவர் கூத்தனேன்னும் தமக்கு ஈட்டி
யெழுபதேன்னும் பிரபந்தத்தைக் கேட்கச்
சிரச்சிங்காதன மிட்டமை கூறியது.

வரச்சிங் காதன வளவர் தம்பிரான்
றரச்சிங் காதனந் தன்னி லேறியே
துரைச்சிங் காதனந் தொழுங் கவிக்கிடுஞ்
சிரச்சிங் காதனச் சீர்செங் குந்தமே.

(இ-ள்.) பூர்வத்தில் முசுகுந்தன் றவஞ்செய்து வரமா கப்பெற்ற சிம்மாசனத்தையுடைய அவர் குலத்துள்ள சோழ ராசர்களுக் கெல்லாந் தம்பிரானாகிய குலோத்துங்கச் சோழ னாற் கொடுக்கப்பெற்ற சிம்மாசனத்திலேறி சிம்மாசனத் துரைகளெல்லாம் வணங்க வீற்றிருந்த கவியாகிய வெனக்கு ஆயிரத்தெட்டுத் தலைகளாகிய சிம்மாசனமிட்ட சிறப்பினை யுடையோர் செங்குந்தத் தலைவர். எ-று. 64

இதுவுமது

வேட்டுமா னுடரி தாய வேணியர்
சூட்டுதாள் வாரிசத் துணைக ளேத்தியே
யாட்டுக சென்னியை யலர்த்தி யேயெனக்
காட்டுதற் கேயரி கவின்கைக் குந்தமே.

(இ-ள்.) திருமாலானவர் திருவடிகளைக் காணவேண்டி வராகாவதாரஞ்செய்து பூமியைப்பிளந்து தேடியுங் காணு தற் கரிதாகவிருந்த சடாமகுடத்தை யுடைய ப்ரமசிவனது யாவராலு மரிச்சிக்கப் படுகின்ற தாமரைமலர்போன்ற விர ண்டு திருவடிகளையுந் தோத்திரஞ்செய்து உலகத்தாரைப் பார் த்து நீங்கள் முகமலர்ந்து சிரக்கம்பனம் பண்ணுங்களென்று தங்கள் வீரத்தைக் காட்டுதற்கே தலையரிந்து சிம்மாசன மிட்

டனர், கையின்கண்ணழகிய குந்தத்தையுடைய விச்செங்குந் தத்தலைவர். எ-று. 65

இதுவுமது.

விண்டு வேதனு நாடரி தாகிய விமலன்
பண்டு தாருகப் பிரமகத் திப்பழி போகக்
கொண்டு தாமெனக் கடுகியே குடிவழித் தொன்மை
கண்டு தாங்கழுத் தரிந்தது கவின்கவின் குந்தம்.

(இ - ள்.) அரிபிரமர்களாலே தேடுதற்கரிய நின்மலனாகிய பரமசிவனுக்குப் பூர்வத்தில் சம்பவித்த தாருகப் பிரமகத்தியாகிய பழியை அழகிய செங்குந்தத்தலைவர்க ளறிந்து, அதை நீக்குதற்குப் பழைமையான அக்குடிவழி வந்தவர் தாமேயென வுள்ளத்திற் கொண்டு விரைந்து தங்கள் கழுத்தரிந்தது மிகவும் அற்பதம். எ-று. 66

செங்குந்தத்தினது மகத்துவங் கூறியது.

தவந்தனிச் செய்வதென் றலைச்சிங் காதன
மூவந்துபா வாடையிட் டோடுஞ் சோரிமே
னவந்தனிற் பாடிய நங்க வித்திறஞ்
சிவந்திடச் செய்தது திருச்செங் குந்தமே.

(இ - ள்.) செங்குந்தத் தலைவர்கள் உவப்போடு ஆயிரத்தெட்டுத்தலைகளை வெட்டிச் சிங்காதனமாகச்செய்து இரத்தப் பாவாடையிட்டு அதினின்று மோடாநின்ற விரத்த வெள்ளத்தின்மேலிருந்து புதுமையாகப் பாடிய நமது கவியினது மகத்துவம் பிரபலிக்கச் செய்தது அழகிய விச்செங்குந்தமாதலால், உலகத்திலுள்ளீர்! இச்செங்குந்தத்தைப் பூசியாது பாசபந்த முதலிய துறந்து வனத்திற் றனியாக விருந்து தவஞ்செய்ய வேண்டுவதென்னை. எ-று. 67

கவித்திறஞ் சிவந்திடச் செய்ததேனவே ஆயிரத்தெண் மரு மிப்பிரபந்த முற்றியபோது உயிர்பெற் றெழுந்தனரென்

பதூஉம், அதனலிப்பிரபந்தம் தெய்வீகமுடைய தென்பதூ
உம் பெற்றும்.

சேங்குந்தத்தின் பெருமை கூறியது.

வீணுக்கே ருத வாய்மை விளம்பிடா வெற்றி யாள
ராணுக்கே ருய்ப்பி றந்தோ ரடுபுலிப் பதாகை மன்னர்
நாணுக்கே ருத சாப நாட்டியே யிறத்த மாறன்
மாணுக்கே ருத மாற்ரு ரடைந்திட மருவுங் குந்தம்,

(இ - ள்.) பிரயோசனத்துக்குப் பொருந்தாத வல்லமை யைத் தம்வாயாற் சொல்லாத் வெற்றிப்பாட்டினை யுடையவ ரும் ஆண்பிள்ளைகளுக்குள்ளே சிங்கம்போலும் வலியினராய்ப் பிறந்து ஒப்பற்ற கொல்லுந் தொழிலையுடைய புலிக்கொடி யைத் தாங்கினவருமாகிய செங்குந்தவரசர்கள் கையின்கண் நாணியேறிடுதற்கு வளையாதவில்லை நிறுத்தி ஒடித்த ஸ்ரீராமன் பெருமைக்கு மேற்பட்ட சிங்கம்போலும் வல்லமையுடைய சத்துருக்கள் சரணுகதியாகத் தம்மை யடையக் குந்தமருவி யிருக்கும். எ-று. 68

சேங்குந்தத்தின் பெருமையை உலகம் புகழ்ந்தமை கூறியது.

வட்டமா ரவையுழை வந்த மேலவ
ரிட்டபா வாடைகண் டிசைபெற் ருதும்மண்
முட்டவந் துயிர்பெறீஇ மொய்த்து ளேமெனக்
கட்டுள் குந்தர்சீர் கழறி யேத்தினர்.

(இ - ள்.) வட்டமான விச்சபையின்கண் வந்த மேலவர் இச்செங்குந்தத் தலைவர் பிரபந்தங்கேட்க அம்பலக்கூத்தனு கிய நமக்குச் செய்வித்த சிரச்சிங்காதனத்தோ டிரத்தப்பாவா டையைக்கண்டு, நாமிவ்வுலக முழுதும் பல்குலங்களிற் பிற ந்துவந்து மித் தக்கபுகழைப்பெற்றுக்கொள்ளா துயிர்பெற்று நெருங்கி யிருக்கின்றே மிஃதென்னையென்று தம்மை யிகழ் ந்து கட்டுப்பாட்டினையுடைய செங்குந்தத் தலைவரது சிறப்பு களை யெடுத்துச் சொல்லித் துதித்தனர். எ-று. 69

செகுந்தத்தலைவர் பெரும்புகழ் பெற்றேரெனக் கூறியது.

செந்தமிழ்க் காகப் போந்து சிவந்தபா வாடை யாக
நந்தமக் கிடுங்கா லெந்த நகரமு முளம்வி யந்த
வந்தரத் தமரர் வாழ்த்தி யணிமலர் மாரி பெய்தா
ரிந்தச்செங் குந்தர் பெற்ற விசையெவர் பெற்ரு ரம்மா.

(இ - ள்) குற்றநீங்கிச் செவ்விதாகிய ஈட்டியெழுப தென்னுந் தமிழைப் பெரும்பொருட்டு வந்து அம்பலக்கூத்த ஞகிய நமக்குச் சிரச்சிங்காதனத்தோ டிரத்தப் பாவாடை யிட்ட காலத்தறிந்த வெந்த நகரத்திலுள்ளாரு முள்ளத்தில் ஆச்சரியத்தை யடைந்தவராய்ச் சந்தோஷித்தனர். தேவருலகத்திலுள்ள வமரர்க ளிவர்களை நீடூழிவாழியென வாழ்த்தி யழகிய மலர்மாரி சொரிந்தனர். ஆதலா லித்தன்மையினை யுடைய செங்குந்தத்தலைவர் பெற்ற புகழைப்போல உலகத்தி லெக்குலத்தார் பெற்றனர். எ-று. 70

செங்குந்தத்தின் பெருமை கூறற்பாலாரிணையரெனக் கூறியது.

அம்பர்நாட் டமர்ந்த குந்த மயனரி யரன்மூன் றென்னு
மும்பர்தா மறிய வேண்டு முயர்ந்தமுத் தமிழி ஞலே
கும்பசம் பவனே தேர்ந்து கூறவே வேண்டு மல்லா
லிம் ர்யாங் கூற வேண்டு மெவர்மற் றுங் கூறு வாரே.

(இ - ள்.) கைலாயமென்னும் அந்தவுலகி லெழுந்தருளி யிருந்த நவவீரர்கள் கையின்கண்ணிருந்த குந்தத்தினது பெருண்மையை அயன் அரி அரனென்னுந் திரிமூர்த்திகளாகிய தேவர்களறியவேண்டும். அன்றி அகத்தியனே ஆராய்ந்து மேலான இயலிசை நாடகமென்ற முத்தமிழிஞலுஞ் சொல்லவேண்டும். அன்றி இவ்வுலகத்தில் அம்பலக்கூத்தனுகிய யான் கூற வேண்டும். இஃதன்றி மற்றியாவர் கூற வல்லார். எ-று. 71

ஈட்டியெழுபது மூலமும் உரையும்
முற்றிற்று.

# ஏரெழுபதும்,

## திருக்கைவழக்கமும்.

கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் உழவர்களாகிய காராளர் மீது பாடிய ஏரெழுபது எனனும் இந்நூலை வெகு சுத்தமாக திருத்தி முன்னிருந்த பதிப்புகளைவிட மிகவும் அழகான டபுள்கிரவுன் 16-பக்கம் கொண்ட சைசில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 2.

மகாகவியாகிய கம்பர்
அக்னிவம்ச க்ஷத்திரிய மகாராஜர்களாகிய
வன்னிய பூபதிகள்பேரிற் பாடிய

# செம்பொற்சிலையெழுபது.

இச் செம்பொற்சிலை யெழுபதென்னும் புத்தகத்தை முற்பதிப்பைவிட திருத்தியும், விளக்கியும், புதுக்கியும் தற்கால நாகரீகத்துக்கேற்ற டபுள் கிரௌன் 16-பேஜ் சைசில் அச்சிடப்பட் டிருக்கிறது. இதன் விலை அணா 2.

# சோணசைலமாலை.

நல்லாத்தூர் துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய சோணசைல மாலையை வெகு சுத்தமாகத் திருத்தி அச்சிட்டிருப்பதோடு பேற்படி சுவாமிகளின் திவ்விய சரித்திரமும் சேர்க்கப்பட் டிருக்கிறது. விலை அணா 2.

கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் இயற்றிய

# மாறன் பஞ்சரத்தினமும்,

## திருமகள் கட்டளைக்கலித்துறைப் பத்தும்.

விலை பை 6.

---

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,
புரசை, சென்னை

அருணகிரிநாதர் அருளிச்செய்த

## திருப்புகழ் 200 பாடல்கள்.

இத்திருப்புகழ் பலவாறு சிதைவுற்றிருப்பதை ஒருவாறு திருத்தியும், சந்தங்களையும், துள்ளல்களையும் சரிவர திருத்தி, ஆறுபடைவீடுகளையும் வரிசைப்படுத்தி, அருணகிரிநாத சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், திருவுருவப் படமும் சேர்த்து வெகு அழகாக அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை அணா-6 ஷை 160-பாட்டு விலை அணா-5

## நவதேவர் கீர்த்தனை.

இதில் விணாயகர், சிவன், விஷ்ணு, சுப்பிரமணியர், சரசுவதி, தேவி, தாசரதி, மாருதி, தர்மசாஸ்தா முதலிய கடவுளின்மீது கூறப்பட்டிருப்பதால், கீர்த்தனை படிப்போருக்கும் நாடகம் நடிக்கும் நடிகர்களுக்கும் சங்கீதம் பயில்வோருக்கும் ஓய்வு நேரங்களில் பாடல் பாடவேண்டுமென்ற ஆவலுடையவர்களுக்கும் இக்கீர்த்தனை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பெருமை வாசிப்போருக்கே தெரியவரும்.

இதன் விலை அணா—5.

## ஔவைக்குறள்.

ஔவையார் அருளிச் செய்த இக்குறள் மூலபாடமாத்திரம் வெகு சுத்தமான பதிப்பாக திருத்தியும், புதுக்கியும், தற்கால நாகரீக அளவான டபுள்கிரவுன் 16-பக்கங்கொண்ட சைசில் வெகு அழகாக அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை அணா 2.

---

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,
புரசை, சென்னை.